பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

மார்ச் 2019



பாலைவனத்தில்
தண்ணிருக்கு அலைபவனைப் போல
நான் படிப்பதற்கும்
எழுதுவதற்கும் அலைபாய்கிறேன்.

மு. பாலசுப்பிரமணியன்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 மார்ச் 2019

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸ்ர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி – தமிழ்ச்சிட்டு**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.




கவியுலகப் பூஞ்சோலையின் மூன்றாம் ஆண்டு விழாவில் ...

# மீதமிருக்கும் முத்தம்

## மகிழ்ச்சி ஆ.ராம்குமார்



அன்று மாலை நேரத்தில் தான் அவளை பார்த்தேன். பேருந்திற்கான காத்திருப்பு நேரத்தில். உங்களுக்கு நிச்சயம் அவளை இப்போது பார்த்தால் ஞாபகம் இருக்காது. எனக்கு ஞாபகம் இருக்கு. எப்படி மறக்க முடியும் என் தேவதை அல்லவா? அவள். என் வாழ் நாளின்பாதி நாட்களை கணவோடும், எதிர் பார்ப்போடும், புன்னகையற்று. சுற்றியுள்ள மனிதர்களையெல்லாம், யாரும் நமக்கானவர்கள் இல்லை என்றும் மனம் வெறுக்க ஓடிக் கொண்டிருந்த அந்த தருணத்தில் தான் அவளை நான் மீண்டும் பார்த்தேன்.யார்? என்ற கேள்விக்குள் நீங்கள் புகுந்து, உங்கள் அதிமேதாவித்தனத்தை பயன்படுத்தி எனது சொந்த வாழ்க்கையையும், அந்தரங்கத்தையும் பார்க்க முயன்றிருப்பீர்கள். அந்த அளவிற்கு நான் உங்களை சிரமப்படுத்த மாட்டேன்.நானே சொல்கிறேன்.

அவள் வேறு யாருமில்லை கற்பகம் தான். நீங்கள் யாரேனும் கற்பகத்தை பார்த்திருக்கிறீர்களா? வாய்ப்பிருந்திருக்காது. நானே அவளை பதினைந்து வருடங்களுக்கு பிறகு இப்பொழுதுதான் பார்க்கிறேன். அதே சிலிர்ப்பும், பதட்டமும், இதய துடிப்பின் வேக அதிகரிப்பும் இன்னும் அப்படியே தான் இருக்கிறது அப்போது தான் புரிந்தது நான் இன்றுவரையும் அவளை காதலித்துக் கொண்டிருக்கிறேன் என்று.

இப்போது அவள் வேறொரு உலகத்தில் உள்ளது போல் தோற்றம் கொண்டிருந்தாள். பாவாடை சட்டை சேலைக்கு மாறியது. தனது மேனி அழகில் பொருப்பில்லாத குணம், உடல் மெலிந்த தோற்றம். ஆனால் நான் பார்த்த கற்பகம் இது இல்லை. நான் பார்த்த கற்பகம், பதிமூன்று வயதை நிரம்பிய பெண்.

இரட்டை ஜடைகட்டி, சிவப்பு நிற ரிப்பனால் பூ போட்டு, வெள்ளை சட்டை, நீல நிற பாவடை அணிந்து தன் தோள்மீது போக்கை மாட்டிக் கொண்டு நடந்து வரும் அழகை பார்த்து சூரியனே பல்லிலுத்து வெளியிலை கொட்டிய நாட்கள் அதிகம். அவள் நடந்து வரும் போதே ஆயிரம் கவிதைகள் புனைய தோன்றும் ஆனால் அவையெல்லாம் அவளது கொலுசு சினுங்களையும் சிரிப்பையும் கண்டு வெட்கப்பட்டு மறைந்த காலம் அது.

அவள் அன்று சிரித்த சிரிப்பு இன்று

வரையிலும் ''ஏதோ ஒரு கணத்தில் பல கசப்பான நிகழ்வுகளை தவுடு பொடியாக்கிவிடும்''

கற்பகம், வெறும்பெயரல்ல.அது இன்று வரையிலும் யாரலும் புனையப்படாத கவிதை. அவள் தான் என் காதலி,மனைவி எனறு நினைத்து கணவில் சோறாக்கிய நினைவுகள் எல்லாம் திரையிட்டு கண் முன்னே திரையிடுகிறது மனம்.

அன்று இரவு எட்டு மணிக்கு தான் முடிவு செய்தேன் அவளிடம் காதலை சொல்ல வேண்டும் என்று. இளவரசு அண்ணன் காதலித்து திருமணம் செய்து சந்தோசமாக வாழ்ந்து வருவதை கண்டு நாமும் காதலித்து தான் கல்யாணம் பன் னனும்னு முடிவு செய்தான்.

அந்த காலை அவனுக்கு பெரிய எதிர்பார்ப்புடன் இருந்தது. சூரியனுக்கு முன்பும், கூவும் சேவலுக்கு மு ன்பும் எழுந்து ஏரியில் குளித்து விட்டு வந்து பரபரப்புடன் ரெடியாகி கொண்டிருந்தா ன் பள்ளிக்கூடத்திற்கு.எப்போதும் அவள் பள்ளிக்கு உள் வரும் போதெல்லாம் தென்னை மரத்தின் ஓரத்தில் நின்று பார்ப்பதை வழக்கமாக கொண்டிருந்தான். தினமும் அதை தனது கடைமை தவராத வேலையாக செய்து வந்தான்.

கொஞ்ச நாள் கழித்து அவளக்கு அது தெரியவந்தது .ஆனால் அவள் அதை பெரிதும் பொருட் படுத்தவில்லை. அவளுக்கும் தெரியும், மரத்தின் ஓரத்தில் நின்று பார்ப்பதும், பள்ளிக்கூடம் முடிந்து மாலை வீடு செல்லும் வரை, அவன் பின் தொடர்வதையும் கண்டு மனம் நிறைய புன்னகையுடன் வீட்டை அடைவது அவளுக்கு அவ்வளவு விருப்பம்.

அதன்பிறகு இருவருக்குமிடையே யாரும் தூது கிடையாது.அவர்களுக்கு கவிதைளில் வர்ணிக்க மழையோ, காற்றோ, வெயிலோ தேவை படவில்லை. அவள் அவனை பார்க்கும் போதும்,நெருங்கி விலகி செல்லும் போதும் மலர்களை உதிர்க்கயம் மரம் போல் புன்னகையை உதிர்த்து விட்டு செல்வாள். இப்படி தனது காதலை புன்னகையும், தேன் மிட்டாய் பரிமாறிக்கொள்வதுமாக கொண்டிருந்தது.

நாளை காதலர் தினம் கற்பகத்திற்கு நல்ல கவிதை எழுதி கொடுக்க வேண்டும் என்றும். ரொம்ப நாட்களாக அவள் கொழுத்த கண்ணத்தில் ஒரு முத்தம் பதிக்க வேண்டும் என்பது அவன் கணவு.அதனால் முத்தத்தை கேட்பது போல் கவிதை எழுத வேண்டும் என்று பலரிடமும் யோசனை கேட்டும், இளவரசு அண்ணணை கேட்டும் தோல்வியுற்றான்.

விடிந்து மறு நாள் பள்ளிக்கூடத்திற்கு சென்று யாருக்கும் தெரியாமல் தன் கையில் இருந்த கடிதத்தை அவளின் கைகளில் திணித்தான்.அதை ஒரு கணமும் மறுக்காமல் வாங்கி உள்ளங்கைக் கொண்டு அடக்கினாள்.

அந்த கடிதம் நான்கு மூளையிலும் ''ஆர்ட்டின'' வரைந்து அதன் நடுவே I LOVE U என்று எழுதியிருந்தை யாருக்கும் தெரியாமல் பார்த்தாள்.அதை பார்த்தவுடன் மனதில் ஏதோ ஒரு பெரிய உற்ச்சாகம் ஏற்ப்பட்து கற்பகத்திடம்.

பிறகு தனது தோழிகளிடம் கடிதத்தை காட்டினாள். அந்த கடிதத்தை பார்த்து கிண்டல் செய்தார்கள். ''இத தவர வேற எதயும் அவனுக்கு எழுத தெரியாதாட்டுக்குனு'' சொன்னவுடன். எந்த கோபமும் இன்றி காதலில் I LOVE U என்பதை விட என்ன பெரிய வார்த்தை வேண்டும்.அந்த வார்த்தை தானே அன்பு, காதல், காமம், ஆசை, கணவு எல்லாமே என்று சொன்னாள்.

மறு நாள் அந்த கடிதத்தில் சிவப்பு சாயம் பூசிய தன் உதட்டால் முத்தத்தை பதித்து கொடுத்தாள். தானும் காதலை முழுமையாக ஏற்று கொள்கிறேன் என்பதற்கு சான்றாக.

அவன் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கு வருவதே அவளை பார்ப்பதற்கு தான் என்பது தான் உண்மை. அவனுக்கு படிப்பே ஏறவில்லை யென்றாலும் பள்ளிக்கு வருவதை நிறுத்தியதே இல்லை. தினமும் காலை பள்ளிக்கு கிளம்பும் முன் தன்னை கண்ணாடியில் பார்த்து சிரிப்பதும், தலைமுடியை கலைத்து கலைத்து மறுபடி மறுபடியும் சீவுவதுமாக இருந்தான்.



அவன் என்றும் நினைத்திராத எண்ணம் மனதில் வர தோன்றியது. பிறந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து வந்த குடிசை வீட்டையும், தெருக்களையும் கண்டு வெறுப்புற்றான்.

கற்பகத்தின் ஆடைக்கும் அவன் ஆடைக்குமான வேற்றுமையை ஒப்பிட ஆரம்பித்தான். தன்னை முற்றிலும் மாற்றிக் கொள்ள ஆசைப்பட்டான். ஆனால் அது வெளி தோற்ற அளவில் மாறவில்லை. எப்போதும் போல நண்பர்களிடம் பேசிக் கொண்டிருக்கும்போது, அவன் மனம் நிறைவுடன் தன் நண்பர்களிடத்தில் அவனது காதலை பற்றி சொல்லி மனம் மகிழ்ந்தான்.மறு நாள் காலையில் பள்ளி சுவரெங்கும் அவன் பெயரும் கற்பகம் பெயரையும் சேர்த்து எழுதியிருந்தது தான் பள்ளியின் தலைப்பு செய்தி. தலைமையாசிரியர் இருவரையும் கூப்பிட்டு திட்டி கண்டித்தார். இதை நான் செய்யவில்லை என்று சொன்னான் அவன்.ஆனால் கற்பகத்தின் அப்பா அதை கண்டு, "பிச்சக்கார நாய, உனக்கு போய் எங்க வூட்டு பொன்னு கேக்குதா குடும்பத்தோடு கொளுத்திப்புடுவ ஜாக்கிரத'' என்று அவன் அப்பாவிடம் கூறினார். சின்னப்பய எதோ தெரியாம பன்னிட்டா மன்னிக்கனுசாமி என்று காலில் விழுந்தார்.

கற்பகத்தை அவரது அப்பா மறு நாளே டீசியை(TC) வாங்கி வேறு பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டார். பிறகு கற்பகத்தை பார்ப்பதே கடினமாகி விட்டது.

வருசத்திற்கு ஒரு முறை கோவில் திருவிழாவிற்கு வரும் போது தூரத்தில் இருந்து தரிசனம் பெரும் பக்தனை போல் அவளை கண்டு மகிழ்ந்து போய்விடுவேன். அதன் பிறகு நீண்ட நாட்களாகி இன்று தான் பார்க்கிறேன். ஆனால் அவள் என்னை பார்த்திருக்க வாய்ப்பில்லை.

அவளை பார்த்தவுடன் தன் சட்டை பையில் இருந்த பசைப் போட்டு ஒட்டிய கடிதத்தை பிரித்து பார்த்து விட்டு அவளை நோக்கி இரண்டடி நடந்தான்.

அம்மா என்ற குரல் அவனை பின்னோக்கி நடக்க செய்தது. அவள் அச்சிறுவனை அள்ளி அனைத்து முத்தமிட்டு சுரேசு என்றாள். கண்ணீருடன் பேருந்தில் ஏறி கடிதத்தை பிரித்து அவளுக்கு கொடுக்க நினைத்த மீதமிருந்த முத்தத்தை கொடுத்து விட்டு, அவள் ஏறும் பேருந்தை தூரத்தில் இருந்தே பார்த்துக் கொண்டே இருக்கையில் பேருந்து கடந்தது அவளையும், அவளுக்கு கொடுக்க வைத்திருந்த முத்தத்தையும்.

தனது பேக்கில் உள்ள டைரியை எடுத்து "தயவு செய்து மகன்களுக்கு காதலன் பெயர் வைப்பதை நிறுத்தி கொள்ளுங்கள்" என்று எழுதி முடித்து, தனது மகள் கற்பகத்திடம் கதை சொல்ல ஆரம்பித்தான்.



என் அமைதியைக்
கலைத்து விடுகிறது
உன் பேரமைதி


பறை ஓய்வெடுப்பதில்லை
அடித்தவன் தான்
ஓய்வெடுக்கிறான்

தேய்வதுவும்
வளர்வதுமாய்
இருக்கிறது
இந்த வாழ்க்கை..
நிலவைப் போல

குப்பைகளை என்னவோ
நாம்தான் போடுகிறோம்
தூய்மைப்படுத்தத்தான்
மற்றவர்களைத்
தேடுகிறோம்

கு.அ.தமிழ்மொழி

# காதலெனும் கடிவாளம் பூட்டிவிட்ட மாயாவி!



நினைத்த பொழுதில் எப்படி நீ
நெஞ்சுக்குள் நிலவாகி உலா வந்தாய் ?
வானம் வெடித்துக் குளிர்மழை பெய்தாலும்
மோனத்தவத்தில் முத்திரைப் பதித்தாலும்
நெஞ்சம் முழுக்கக் கங்கையாய் பாய்வதேன் ?
நீண்ட நடைபயணம் வாழ்நாளில்
நெடிது வளர்ந்த பாதையெங்கும் தடம்பதிக்க
வளைய வரும் வண்டாக உடனெங்கும்
விளையாட்டாய் வருவதேன் ?
தெவிட்டாதக் கன்னல் கரும்பாகிச் சுவைப்பதேன் ?

பாய்ந்துவரும் புதுவெள்ளம் நீ
பகலிரவாய் ஓயாத கடல் அலை நீ
புத்துயிர் ஊட்ட வந்த புதுப்புனல் நீ
இத்தரையின் ஒளிர்முத்துப் பந்தல் நீ
சித்தம் கலங்கி நிற்க சிரிப்பதேனோ ?

நான்கு எழுத்து வார்த்தைக்குள்
தேங்கி நிற்கும் வண்ணம் நீ
இனம் புரியா எண்ணமதில்
ஈடிலா கோலோச்சும் அரசவையில் காதலெனும்
கடிவாளம் பூட்டிவிட்ட மாயாவி நீ

**கா.ந.கல்யாணசுந்தரம்**

# ருத்ரா டீச்சர்

த.சாந்தி

மதிய உணவு இடைவேளை முடிந்து வகுப்புகள் தொடங்கியது. ருத்ரா டீச்சர் ஏழாம் வகுப்பில் கரும்பலகையில் விலங்கு செல் படம் வரைந்துகொண்டிருந்தாள். வாசலில் நிழலாடியது. நிமிர்ந்து பார்த்தாள். வாட்ச்மேன் தாத்தா நின்றிருந்தார். “அம்மா, ஒங்கள பெரிய டீச்சர் கூப்டாங்க” சொல்லிவிட்டு, பதிலை எதிர்பார்க்காமல் சென்றுவிட்டார். ருத்ரா பிள்ளைகளிடம் திரும்பி, ”ஸ்டூடண்ட்ஸ், இந்த படத்த வரஞ்சிட்டு இருங்க, தோ வந்திர்ரன். சத்தம் போடக்கூடாது ,சரியா” என்று சொல்லிவிட்டு ஹெச்.எம் அறையை நோக்கி நடந்தாள்.

அறைவாசலில் நின்று, ”மே ஐ கம்மின் மேடம்” என்றாள்.

“எஸ், கம் இன்” என்ற ஹெச்.எம் மின் கம்பீரமான குரலை கேட்ட பின்பே உள்ளே சென்றாள். அங்கு ஹெச்.எம் மின் எதிரில் அமர்ந்திருந்த கணவன் கதிரைப்பார்த்ததும் திகைத்தாள். என்ன என்று சைகையில் கேட்டாள். அவனோ அவளை கண்டு கொள்ளவேயில்லை.

“வாங்க டீச்சர், நீங்க ஒரு மூணு நாளுக்கு எம்.எல் எழுதிக்குடுத்துட்டு கெளம்புங்க. நா மீட்டிங்க்குக்கு போறேன்” என்று சொல்லிவிட்டு அவனிடம் திரும்பி, ”சார், நா கெளம்புறன். நீங்க அழைச்சிட்டு போங்க” என்று சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார்.

கதிரின்முகம் இறுகி கிடந்தது. ”லீவ் குடுத்துட்டு வா, நா வெளியில வெயிட் பண்றன்” என்று அவனும் வெளியேறினான். ஏதோ பூகம்பம் வெடிக்கப்போவுது.. கேட்டா பதில் வராது. சரி எதுவானாலும் சமாளிக்க வேண்டியதுதான். சமாளிக்கறத்துக்குன்னே நேர்ந்துவுட்டுட்டாங்க என்ன. கல்யாண மான இந்த அஞ்சு வருடத்துல எத்தனையோ பார்த்துட்டன். இதையும் பாத்துடலாம் என மனச திடப்படுத்திக்கொண்டு வெளியே வந்தாள் ருத்ரா டீச்சர்.

இவளைபார்த்ததும்வண்டியைஉதைத்த உதைப்பில் அவனது கோபம் தெரிந்தது. எதுவும் பேசாமல் ஏறி அமர்ந்தாள். வண்டி கிளம்பியது. அவர்கள் ஊருக்கு செல்லும் பாதையில் வண்டி சீறிப்பாய்ந்தது. ஊர் போய் சேர ஒரு மணி நேரமாகும்.

அதற்குள் இவர்களின் முன்கதை சுருக்கத்தை அறிந்து கொள்ளலாம்.


ருத்ரா வீட்டிற்கு மூத்த பெண். பொறுப்பானவள். படிப்பில் சுட்டி. இரண்டு தங்கைகள். ஒரு தம்பி. அப்பா அரசு ஊழியர். அம்மா, கடைக்குட்டி சீனு பிறக்கும் போது பிரசவத்தில்சிக்கல்ஏற்பட்டுஇறந்துவிட்டாள். அப்பாவின் கல்யாணமாகாத தங்கைதான் இந்த நால்வரையும் வளர்த்தாள். தங்கைகள் இருவரும் பத்தாம் வகுப்பையே தாண்டாத நிலையில் ருத்ரா பி.எஸ்ஸி விலங்கியலும், பி.எட் டும் முடித்தாள். தேர்வு எழுதி அரசு பள்ளியில் வேலையில் சேர்ந்து, தங்கைகள் இருவரையும் கரைசேர்க்க தந்தைக்கு உதவினாள். தம்பி படிப்பில் சுமார்தான். பத்தாவது முடித்து ஐ.டி.ஐ படித்ததே பெரிய சாதனைதான். குடும்பத்து ஆண் வாரிசு என்று ஏகப்பட்ட செல்லம். அப்பாவின் உலகமே அவன்தான். அவனை எப்படியாவது நல்ல நிலைக்கு கொண்டு வந்துவிட வேண்டும்

என்று படாத பாடுபட்டார். ஆனால் எதுவும் அவனிடம் செல்லுபடியாகவில்லை. படிப்பில் மந்தமாக இருந்தான். ஏகப்பட்ட கோச்சிங், டிரெய்னிங், கவுன்சலிங் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயின. மனம் வெறுத்து போனார். அவனிடம் பேசுவதையே குறைத்து கொண்டார். அவனும் அவரிடமிருந்து விலகியேஇருந்தான்.அவனின்தேவையறிந்து ருத்ராவே அவனுக்கு எல்லாவற்றையும் செய்தாள். தனது முப்பதாவது வயதில் அப்பா கைகாட்டிய, அரசு பேருந்து ஓட்டுனரான இந்த கதிரை திருமணம் செய்துகொண்டாள்.

கதிரின் அப்பா கங்காசலம் கதிரின் பத்தாவது வயதிலேயே இறந்துவிட்டார். கதிருக்கு ஒரு அண்ணனும், ஒரு தங்கையும் உண்டு. கதிரின் அம்மா லட்சுமி பிள்ளைகளை கூலிவேலை செய்துதான் காப்பாற்றினாள். கதிரின் அண்ணன் கேசவன் வாயில்லா பூச்சி. அம்மாவார்த்தைக்குமறுபேச்சுபேசமாட்டான். கதிரும், தங்கை செல்வியும் அவனுக்கு நேர் எதிர். யார் எப்படி போனாலும் பரவாயில்லை. தாங்கள் நினைத்தது நடக்கவேண்டும் என்கிற சர்வாதிகார பேர்வழிகள்.

கேசவன் பதிமூன்று வயதிலேயே தாய்க்கு உதவியாய் கூலிவேலைக்கு போவான். எட்டாவதுடன்படிப்பைநிறுத்திக்கொண்டான். கதிர் மட்டும் படித்தான். பிறகு டிரைவிங் லைசென்ஸ் எடுத்து உறவுக்காரர் ஒருவரின் உதவியால் அரசாங்க வேலையிலும் சேர்ந்தான். சிறுவயது முதலே வசதியாக வாழவேண்டும் என்ற எண்ணம் அவனுள் வேரூன்றியிருந்தது. தங்கை செல்வியை டீச்சர் ட்ரெய்னிங் படிக்க வைத்தான்.

கேசவனுக்கு பக்கத்து ஊர் பெண்ணை திருமணம் செய்து வைத்தனர். மணப்பெண் கோகிலா நல்ல உழைப்பாளி. மாமியாருக்கு அடங்கிய மருமகள். கதிரின் கல்யாணப்பேச்சு எழுந்தது. "கல்யாணம் எப்ப பண்ணிக்கறது, எப்படி பண்ணிக்கறது, யார பண்ணிக்கறது ங்கறதெல்லாம் நா முடிவு பண்ணிக்கறேன். நீ ஒன்னோட வேலய பாரு" என்று தாயிடம் சீறினான். நண்பர்களிடம் "வேலைக்கு போகும் பெண் இருந்தால் சொல்லுங்கள்" என்று சொல்லிவைத்தான். ருத்ராவின் தூரத்து உறவினர் ஒருவரின் மூலமாக அவளை பெண் பார்க்க வந்தான். இரு வீட்டாருக்கும் பிடித்திருந்ததால் கல்யாண தேதியை முடிவு செய்தனர். அதன் பிறகு கதிரின் நடவடிக்கைகளில் பெரும் மாறுதல் ஏற்பட்டது.





# சிறகடிக்கும் பறவை

எதுவும் புரியாது..
விழிக்கிறது உள்ளம்.
கனவுகள் இல்லை!
கற்பனை இல்லை!
களவு போனது மகிழ்ச்சி!
பலவற்றையும்
நினைந்துப்பார்க்கிறது
எவ்வளவு மாற்றங்கள்!
ஏக்கமுடன் நினைத்துப்பார்க்க
அழகிய நினைவுகள் பந்தலிட்டு
விழிகள் நனைகிறது.
விரும்பித்தான் ஏற்றுக்கொண்ட
விசமென கசந்த நினைவுகள்
இனிமையாகத்தான் மாறவே...
தொடங்காதோ -
விடியாத இரவுகளாய்த்
தொடருமோ இடருடன்?
படித்து விட முயன்றிடு
பிறர்மனம்.
பழகிக்கொள் அசைபோட
திரும்பலாம் அனைத்துமே
சிறகடிக்கும் பறவையென
பறந்திடத்தான்.

**தென்றல் கவி – தமிழ்ச்சிட்டு**

குடும்பத்தில் எல்லோரிடமும் பாசமாக நடந்துகொள்பவன் யாரிடமும் பேசுவதில்லை. சரியாக சாப்பிடுவதும் இல்லை. யாரிடமோ போனில் பேசுவதும், எப்போதும் ஏதோ சிந்தனையில் இருப்பதுமாகவே இருந்தான். எல்லாம் கல்யாணம் ஆனால் சரியாகிவிடும் என்றுலட்சுமிநினைத்தாள்.ஆனால்நடந்ததோ வேறு. கல்யாணம் நடந்த அன்றே பக்கத்து டவுனில் வீடு வாடகைக்கு பிடித்து பாலும் காய்ச்சிவிட்டான். இதை அறிந்த லட்சுமி திகைத்தாள்.

அதைப்பற்றி கேட்டபோது, "சின்ன வயசுலேர்ந்து நா பட்டது போதாதா. நாளைக்கு எம்புள்ளையும் கஷ்டப்படணுமா? போதும்டா சாமி. அதனாலதான் வேலைக்கு போற பொண்ணாப்பாத்து கட்டிகிட்டேன். என் கடமை செல்விய படிக்கவச்சிட்டன். கல்யாணம் ன்னுல்லாம் என்னை தொடரக்கூடாது. நீயோ இல்ல, அது வேலைக்கு போயோ பாத்துக்க வேண்டியதுதான். மேலமேல தொந்தரவுபண் ணக்கூடாது சொல்லிட்டேன்". கண்டிப்பாக சொல்லிவிட்டான். செய்வதறியாது திகைத்து நின்றாள் லட்சுமி. மகன் நல்லவன்தான். கல்யாணத்துக்கு முந்தியே போனில் பேசி பேசி அவனை மயக்கி முந்தானையில் முடிந்து கொண்டாள் என்று ருத்ரா மீது வன்மம் கொண்டாள். கல்யாணம் முடிந்த ஒரு மாதத்திலேயே செல்விக்கும் அரசாங்கவேலை கிடைத்தது. வேலைக்கு சென்று வர வசதியாய் இருக்குமென்று அவளை தங்களுடனேயே தங்கவைத்துக்கொண்டான். தங்கைக்கு சாப்பாடு போட பணம் கேட்பது அநாகரிகம் என்று நினைத்து அவளிடம் பணம் கேட்பதில்லை.மற்றபடிபணவிஷயத்தில்மிகவும் கறாராக நடந்துக் கொண்டான். ருத்ரா அவள் அப்பாவிற்கோ, அத்தைக்கோ, தம்பிக்கோ, தங்கை பிள்ளைகளுக்கோ ஒரு ரூபாய் செலவு செய்வதற்கும் அனுமதிப்பதில்லை. அலுவலக கடன், பர்சனல் லோன், என்று எதையும் விட்டுவைக்காமல் அவள் தலையில் கடனை சுமத்தினான். கடனால் சம்பளத்தில் பிடித்தம் அதிகமாகியது. கையில் சொற்ப தொகையே மிஞ்சினால் அவளால் தன் சுற்றத்தார்களுக்கு எப்படி பணம் கொடுக்க இயலும் என்பது அவனது எண்ணம். தன் செலவுகளுக்கே

தன்னை சார்ந்து இருக்கவேண்டும் என எண்ணி செயல்பட்டான்.

வீட்டின் வாசலில் வண்டி நின்றதும் அங்கு நிலவிய அசாதாரண சூழல் ருத்ராவை அச்சுறுத்தியது. உள்ளே தலைவிரி கோலமாக சுவரில் சாய்ந்து அழுதுகொண்டிருந்த லட்சுமி, ருத்ராவை பார்த்ததும் "எங்குடும்பத்த கெடுக்க வந்த பாவி, நீ நல்லா இருப்பியாடிநாசமா போய்டுவ, ஒந்தம்பிக்கு டீச்சர் பொண்ணு கேக்குதாடி. கம்மனாட்டி பொம்பள வயித்தெரிச்சல கொட்டிக்கிறவன் நல்லா இருக்கமாட்டான்டி.ஆளமயக்கிஎங்குடும்பத்த கெடுத்ததோட இல்லாம ஊர்சுத்தி தம்பிய ஏவிவிட்டு எம்பொண்ணோட வாழ்க்கையும் கெடுத்திட்டியேடி பாவி பாவி, சண்டாளி," வசவு அச்சில் ஏற்றமுடியாத வார்த்தைகளால் தொடர்ந்தது.

தம்பி சீனுவும் நாத்தனார் செல்வியும் வீட்டைவிட்டு வெளியேறி கல்யாணம் செய்துகொண்டனர் என்பது அப்போதுதான் புரிந்தது ருத்ராவிற்கு. அவர்கள் இருவரும் காதலிப்பது தெரிந்தே ருத்ரா அவர்களை அனுப்பிவைத்ததாள் என்று முடிவே செய்து விட்டாள் லட்சுமி. ஆனால் மகனின் சுபாவம் அறிந்து மருமகள் அப்படி செய்வாளா என்று சிறிதும் யோசிக்கவில்லை அவள்.

ஒருகட்டத்தில் ஆத்திரம் அதிகமான கதிர் அவள் முடியை கொத்தாக பிடித்து தலையை சுவற்றில் மோத மயங்கி சரிந்தாள் ருத்ரா. கண்விழித்தபோது ஓரகத்தி கோகிலா மட்டுமே அவளருகில் இருந்தாள். "தோ வரேன், இரு'' என்று எழுந்து சென்ற கோகிலா, கையில் காப்பியுடன் வந்தாள். "இந்தா, குடி" என்று டம்ளரை நீட்டினாள். ''வேணாங்க்கா'' என்றாள். "மொதல்ல குடி, அப்பறம் பேசலாம்'' என்று டம்ளரை கையில் திணித்தாள்.

''ஓடுகாலி முண்ட, அவ செஞ்ச காரியத்துக்கு, ஒன்ன எதுக்கு இந்த பாடு படுத்துறாங்கன்னு தெரியல. இப்ப ஊர் பெரிய மனுஷங்கள கூட்டிக்கிட்டு ஒங்க வீட்டுக்கு போயிருக்காங்க. வந்து என்ன கூத்து நடக்குமோ தெரியாது. அவங்க வர்ரதுக்குள்ள சாப்புட்டுடு'' என்று சொல்லிவிட்டு தட்டில் சாப்பாடும், சொம்பில் குடிக்க தண்ணியும் கொண்டு வந்து கொடுத்தாள். அவள் சாப்பிட்டு முடித்ததும் எழுந்து சென்றாள்.

உடம்பு வலி அவளை தூக்கத்தில் ஆழ்த்தியது. கூடத்தில் பேச்சுக்குரல் கேட்டு கண்விழித்தாள் ருத்ரா. அவர்களாக கூப்பிடும் வரை அங்கே போககூடாது என அங்கேயே படுத்திருந்தாள் ருத்ரா. நீண்ட நேரத்திற்கு பிறகு கோகிலா வந்து அவர்கள் கூப்பிடுவதாக சொன்ன பிறகே சென்றாள்.

மீண்டும் வசவு தொடர்ந்தது. ருத்ரா பிறந்த வீட்டு உறவை முறித்து கொள்ளவேண்டும் என்று கட்டாயபடுத்தப்பட்டாள். செல்வியை எக்காரணங்கொண்டும் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்றும் முடிவு செய்தனர் கதிரும் லட்சுமியும். அவளின் அத்தையின் சாவுக்கு கூட அவள் செல்ல அவர்கள் அனுமதிக்க வில்லை. வாழ்க்கை நரகமாகியது ருத்ராவிற்கு. கணவன் மனைவிக்குள் பேச்சுவார்த்தை நின்றது. கோபம் வரும்போதெல்லாம் சரமாரியாக அவனால் தாக்கப்பட்டாள். அவன் உணர்வுகளுக்கு அவள் வடிகாலானாள்.

அவளது தோழிகள் அவளுக்கு பல ஆலோசனைகள் அளித்தனர். நீயும் மனுஷி தான். அடிமையில்லை என்று புரியவை என்றனர். ருத்ராவிற்கு அழுகைதான் வருமே தவிர, அவனை எதிர்த்து பேச தைரியம் வருவதில்லை. அவளுக்கு தேவையானதை கூட அவன் வாங்கித் தருவதில்லை. இப்படியே ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. தம்பி சீனு கத்தார் சென்று சம்பாரிப்பதாகவும் ஆசைகொன்றும், ஆஸ்திகொன்றுமாக இரண்டு பிள்ளைகளுடனும், அப்பாவுடனும் சந்தோஷமாக வாழ்வதாகவும் கேள்விபட்டாள். இந்த நிலையில் லட்சுமிக்கு கேன்சர். கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள். செல்வியை பார்க்கலட்சுமி ஆசைபட்டதால் சொல்லியனுப்பினர். அவளும் வந்து பார்த்து விட்டு சென்றாள். ருத்ரா அவளை பார்க்க பிடிக்காததால் வெளியில் சென்றுவிட்டாள்.

இரண்டு நாள் கழித்து லட்சுமி இறந்து விட்டாள். கதிர் செல்விக்கு தகவல் சொல்ல வேண்டும் என்றான். புயலாக வெளிப் பட்டாள் ருத்ரா.

''யாருக்கு தகவல் சொல்லப்போறீங்க ''
''செல்விக்குதான், ஏங்கேக்குற, பொறந்த பொண்ணில்லையா?''

"நாங்கமட்டும்பொறக்காதபொண்ணுங்களா"

புரியாமல் முழித்தான் கதிர். ருத்ராவே தொடர்ந்தாள். "ஒங்க தங்கச்சி மட்டுந்தான் பொண்ணா பொறந்தாளா, நாங்கள்ளாம் கெழவியாவா பொறந்தோம்."

"சரி, எல்லாரும் பொண்ணுங்கதான், அதுக்கென்ன இப்ப?" எரிச்சலானான் கதிர். அம்மாவின் உடல்நிலை மோசமான நாளிலிருந்தே இவளுக்கு வாய்கொழுப்பு அதிகமாகிவிட்டது என நினைத்துக் கொண்டான். அவளிடம் கோபத்தைக காட்ட இது நேரமில்லை. முறைத்து பார்த்தான்.

"பெத்ததாயில்லயா. தனி பொம்பளையா எவ்ளோ கஷ்டப்பட்டு வளத்தாங்க. வந்து மொகத்த பாத்துட்டு போவட்டுமே" என்று குறுக்கிட்டது உறவு ஒன்று.

"பெத்த தாய் புள்ளய வளக்குறது ஒண்ணும் பெரிய விஷயமில்ல. கூட பொறந்த அண்ணன் தன்னை கல்யாணம் செஞ்சு குடுத்துட்டு, சீர் செஞ்சிட்டு இருந்தா, தாயில்லாத புள்ளங்கள எப்புடி வளப்பாருன்னு தன்னோட வாழ்க்கயையே மறந்து எங்கள வளத்த என்னோட அத்தை செத்தப்ப அனுப்ப முடியாதுன்னு இந்த லட்சுமியம்மா சொன்னப்ப எங்க போயிருந்தீங்க நீங்க" காட்டமாக கேட்டாள். வாயடைத்து நின்றன உறவுகள்.

"பெத்த தாய கடைசியா பாக்க வரக்கூடாதுன்னு சொல்ற நீயெல்லாம் பொம்பளயாடி" அடிக்க பாய்ந்து வந்தவனை தடுத்து நிறுத்திய கேசவன் "இது உனக்கே நல்லயிருக்கம்மா" என்றான்

"நல்லாயில்லதான். என்ன செய்ய சொல்றீங்க. அவங்க செஞ்ச தப்புக்கு என்ன மாட்டை அடிக்கிற மாதிரி அடிச்சீங்களே. அது நல்லதுன்னா இதுவும் நல்லதுதான்.

அவங்க செஞ்ச தப்புக்கு என்ன பொறந்த வீட்டு உறவையே முறிச்சுக்க சொன்னீங்களே அது நல்லதுன்னா, இதுவும் நல்லதுதான்.

அவங்க செஞ்ச தப்புக்கு என் கையை, தலையை உடைச்சிங்களே, அது நல்லதுன்னா, இதுவும் நல்லதுதான்.

இந்த அஞ்சு வருஷமா என்ன பொண்டாட்டின்னு பாக்காம, வேலைக்காரி மாதிரி நடத்துனீங்களே அது நல்லதுன்னா இதுவும் நல்லதுதான்.

என்ன பந்து மாதிரி மூலைக்கு மூலை ஒதச்சு விளையாடினீங்களே, அது நல்லதுன்னா, இதுவும் நல்லதுதான்.

எல்லாத்துக்கும் மேல என்ன ஏ.டி.எம் மிஷினா நெனச்சீங்களே அது நல்லதுதான்னா, இதுவும் நல்லதுதான்"

நீளமாக பேசி முடித்தாள். இவளுக்கு இப்படியெல்லாம் பேச தெரியுமான்னு திகைத்து நின்றான் கதிர்.

முதலில் சுதாரித்தது கேசவன்தான். "சரிம்மா, முடிவா என்ன சொல்ற நீ" என்றான்.

"நா, என்ன சொல்றது. செல்வி வரக்கூடாது. உயிரோட இருக்கும்போது பாத்தாச்சில்ல. மீறி வரச்சொன்னீங்கன்னா, நா வெளிய போய்டுவேன். சும்மா இல்ல. மொத்தமா போய்டுவேன். பொணத்த எடுக்கறத்துக்குள்ள விவாகரத்து நோட்டீஸ் வரும். உங்களுக்கு புடிச்சத செய்யுங்க. நியாயமானத நான் செய்வேன்". சொல்லிவிட்டு கம்பீரமாய் நடந்து சென்றாள்.

■

# தேம்பி அழும் கவிதை

நாட்ட காப்பாத்த ரயிலேறி போனவனை
மரணம் வந்து மாலை போட்டு
வரவேத்து போனதே..

பெத்த புள்ளயின்
கிலுகிலுப்பு ஆட்டுகையில்
வெடித்த வெடிகுண்டின் சத்தம் வந்து இங்கு கேட்குதே..

பீரங்கியாய் கிளம்பியவன்
வீரத்தின் மார்பில் தழும்பாய் மாறிப் போனானே..

என் சிப்பாயிலிருந்து வெளிவந்த இரத்தம் கூட நம்
தேசப்படமாய் நீண்ட போது
காப்பாற்றமுடியாத பாரததேவி
கொடியை கீழே போட்டுவிட்டு
இப்போது துப்பாக்கி எடுத்து திரிகிறாளே..

அப்பாவின் புகைப்படம் பார்த்து
கேவி கேவி அழுத மகளை, தேற்ற முடியாமல்
தேம்பி தேம்பி அழுகிறது இந்த கவிதை..

ந.வீரா
திமிரி.





# அற்புதப் பாடல்

தலைவியின் கூந்தலும் மணமுள்ளதாம்...
எத்தனை மலர்களில் அமர்ந்திருக்கும் தும்பி?
அத்தனையும் விட தலைவியின் கூந்தலே
அதிக வாசமுள்ளது என கூற சாட்சிக்கு
அழைக்கிறான்.தலைவன்..
அதுவும் எப்படி.?
அவளின் அருமை பெருமையெல்லாம் சொல்லி...
என் நிலத்தை சேர்ந்ததற்காக சொல்லவேண்டாம்..
உண்மையைச் சொல் என்று...
இத்தனை அழகான காட்சியை விளக்கும் அற்புதப் பாடல்...

கொங்கு தேர் வாழ்க்கை அஞ் சிறைத் தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின், மயில் இயல்
செறி எயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ? நீ அறியும் பூவே?

குறுந்தொகை பாடல்..2 - இறையனார்

பூத்திருக்கும் பூவுக்குள் புகுந்துவரும் பொன்வண்டே
காத்திருக்கும் கேள்வியிது கவனமாக விடையிறுப்பாய்.
விதவிதமாய் வண்ணமலர் வண்டேநீ கண்டிருப்பாய்
உதவிடுவாய் உண்மை சொல்லி .
என்னுயிராய் ஏழ்பிறப்பும் தொடர்ந்தவள்
மென்மையிலே மயிலை நிகர்த்தவள்.
முத்துச்சரம் கோர்த்த முல்லைப்பூ பல்லழகி
சித்தம் கவர்ந்த சின்னவளின் கார்கூந்தல்
மணம் போன்றே
நீயமர்ந்த பூவில் நுகர்ந்ததுண்டோ?
ஊரறிய சொல்லிடுவாய் சிறுவண்டே...

- மதுரா

# ஊடலும் ஊடல் நிமித்தமும்

முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி,
புதுச்சேரி.

“நீ எனக்கு அறவே வேணாம்..என்னை விட்டுப் போயிடு” காட்டமாகக் கத்தினாள் ரோசி.

‘‘ஹலோ அப்ப நான் வேணாம்..என்கிட்ட இனி பேச மாட்டே அப்படித்தானே,’

‘‘இல்ல … ஆமா’’

‘‘ஓகே நான் வேணாம் தானே.. பை.’’ சொல்லும்போது அவனுக்குள்ளும் ஸ்ருதி குறைய… இருவருக்குள்ளும் ஒரு பேரமைதி …சிறிது நேரம் உறைந்திருக்க..

‘‘அதெல்லாம் ஒன்னுமில்ல. உன் மேல எனக்கு எதிர்பார்ப்புகள் ஜாஸ்தியாயிட்டே போகுது.’’ அமைதியைக் கலைத்தபடி தயக் கத்தோடு சொன்னாள் ரோசி.

‘‘ம்’’

“அதை நிறைவேற்றும் நிலைமைல நீ இல்லை”

“இல்லடி,என் நெலமைய புரிஞ்சிக்கோடி… ப்ளீஸ், ரெண்டுநாளா நான் பேசல, ஒரு மெசேஸ்கூட அனுப்பல.. அதானே கோபம்… இரண்டு ஷிப்டு பாத்தேன்டி..எல்லாம் உனக்காகத்தான்டி… புரிஞ்சிக்கோடி”

“புரியுது. உன் மேல அத்தனை காதல் .என்னுடைய அறிவு சொல்லுது, ரொம்ப வேணாம் லிமிட்டா இருன்னு. ஆனா என்னால முடியல,நீ இப்ப என்ன பண்ற ? என்ன சாப்பிடுற? எங்க போற? என்கிட்ட ஏன் சொல்லல்ல? ஒரு மெசேஸ் கூட அனுப்பமுடியாத அளவுக்கு முக்கியத்துவம் இல்லாதவளா ஆயிட்டேனான்னு என் மனசு கேட்டுத் தொலைக்குது…. ஆனா எனக்கு உன் நெலமை தெரியுது. எல்லாத்தையும் எப்போதும் சொல்லிட்டு போக முடியாது தான்”

‘‘அப்புறம் என்னப்பா கோபம்’’

‘‘ஆனா என் மனசு ரொம்ப தொல்லை கொடுக்குது. அதனால்தான் சொல்றேன், நான் கொஞ்சம் கொஞ்சமா உன்னைப் பத்தி நெனக்கறத குறைச்சிக்க முயல்றேன். ஒருவேளை அதீத எதிர்பார்ப்பு அதிகமான ஏமாற்றத்தைக் கொடுக்குத்துன்னு நெனக்கறேன்?… என்ன பண்ணுவேன், சொல்லு ..’’ ரோசி இப்போது மனம் திறந்து தன் ஆற்றாமையைக் கொட்டினாள் வினோவிடம்..

“சாரிடி,ரோசி செல்லம்…நான் இந்த உன் உணர்வ ரொம்பவே மதிக்கறேன். எம்மேல இத்தனை காதலா இருக்கறதுல எனக்கு பெருமகிழ்ச்சியாத்தானிருக்கு,இனிமே நான் உன் எதிர்பார்ப்புகளை நிச்சயமாக நிறைவேத்தறேன்… ஓகே, தெனம் ஒரு மெசேஸ் கண்டிப்பா வரும். வரலைனா என்னைக் கொன்னுடு.. ஓகே”

“ம்கும்.. இத ஆயிரந்தடவை உன்கிட் டேருந்து கேட்டுட்டேன். ஒன்னு கேப்பேன்… தப்பா நெனக்கக் கூடாது?” பீடிகை போட்டாள் ரோசி.

‘‘நான் ஏன் தப்பா நெனக்கப் போறேன். எதுவானாலும் சொல்லுடி…’’

“நான் உன்கிட்ட சொல்லாம அன்னிக்கி, ப்ரண்ட்ஸோட சினிமா போயிட்டு வந்தேன்னு, ஏன் அப்படி குதிச்சே..”ஆழம் பார்த்தாள் ரோசி.

‘‘அதுக்கில்லைடி.. நீ என்னுடையவள், நீ பாதுகாப்பா இருக்கனுங்கற ஒரு தந்தையின்

கரிசனம்டி எனக்கு..." கலகலவென்று சிரித்தான் வினோ.

"நீ சிரிக்கறே, ஆயிரம் வலிகள் எனக்கு" தந்தையின் கரிசனம்னு அவன் சொன்னது மகிழ்ச்சி யாயிருந்தாலும் காட்டிக் கொள்ளவில்லை ரோசி.

உண்மையில் வினோவுக்கு நேரம் கிடைக்கவில்லை. பகல் ஷிப்ட், நைட் ஷிப்ட் போயிட்டு வரான். கடுமையா உழைக்கிறான். நல்லா தூங்கி எந்திரிக்கக் கூட முடியாத வேலை செய்கிறான். அப்புறம் friends வராங்க. அதனால அப்புறமா சொல்லிக்கலாம் தான் நினைக்கிறான். அப்புறம் சொல்லிக்கலாம்னு நெனச்சி மறந்துடறான். இதே தவறு பல தடவைகள்

"மனசு வலிக்குதா? எனக்கும்தான்.. எப்பவும் போல இருடி..இப்படி மூஞ்ச உர்ர்னு வச்சிக்காத.. இனி நீ என்ன சொல்றயோ அதையே கேட்கறேன்டி.. சாரிடி, சாரிடி, நீ என் மேல இவ்வளவு காதலா... காதலா வச்சிருக்கே? சாரிடி என் கண்மணி" அவள் கையைப் பிடித்துக் கொஞ்சினான்,கெஞ்சினான், குலாவினான் ,ஆச்சர்யப்பட்டான். வினோவுக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் படபடத்தன. அவனுக்கு மட்டுமல்ல ரோசிக்குள்ளும் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் படபடத்தன.

இப்படித்தான் ஒவ்வொரு தடவையும் நடக்கிறது. தெனமும் மெசேஸ் பண்ண நெனச்சி மறந்துடறான். கொஞ்சநாள் பேசாம இருக்கறது. சண்டை போடறது, அப்புறம் சாரி கேக்கறது..இப்படியே நடக்கற இந்தக் காதல் பேசிக்கொள்கிறது. அடுத்து ஆரத் தழுவிக்கொள்ளவிருக் கிறது. அந்த இரு காதல்குள்ளும் இன்ப வெள்ளம் பெருகி வருகிறது.

ஓடுங்கள்... ஓடுங்கள்... வெள்ளத்தில் மூழ்கிவிடப்போகிறீர்கள்...

அட... வாசகர்களே... உங்களைத் தான்... சொல்கிறேன்.. ■











# புதுவைத் தமிழ்ச் சங்கப் பொன்விழாவின் கண்ணகலாக் காட்சிகள்

புதுச்சேரி மாநிலத்தில் புதுவைத் தமிழ்ச்சங்க பொன்விழா தமிழ் மாநாடு திருவள்ளுவர் ஆண்டு உ0ரு0 (2050) கும்பம் (மாசி) நாள் (3,4,5), ஆங்கில ஆண்டு 2019ஆம் ஆண்டு பிப்ரவரி 15,16,17 ஆகிய மூன்று நாட்களும் சிறப்பாகவும், மிகவும் விமரிசையாக மாநாடு நடைபெற்றது.

முதல் நிகழ்வாக பிப்ரவரி 15 வெள்ளி கிழமை மாலை 3 மணி அளவில் ஏ.எப். டி திடலில் பள்ளி மாணவர்கள், பொது மக்களும் 2000 க்கும் மேற்பட்டோர் சேர்ந்து திருவள்ளுவரின் உருவத்தை உருவாக்கி உலக சாதனை படைத்தனர். அதன் பின்னர் 4 மணி அளவில் அந்த திடலில் இருந்து திருவள்ளுவர் சிலை ஊர்வலத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதனுடன் இசைக் கலைஞர்கள், சிலம்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், குதிரை ஆட்டம் போன்ற அனைத்து கலைஞர்களும் மற்றும் பொதுமக்களும், தமிழ் ஆர்வலர்களும், தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர்கள் என 3000 மேற்பட்டவர்கள் அரசு கொறடா இரா. அனந்தராமன் ச.ம.உ மற்றும் புதுச்சேரி தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்ச் சங்கத் தலைவர் இரா.சிவா ச.ம.உ ஆகியோர் தொடங்கி வைக்க முனைவர் வி.முத்து செயலர் மு.பாலசுப்பிரமணியன், பொருளர் சீனு. மோகன்தாசு ஆகியோர் முன்னிலையில் ஊர்வலம் புறப்பட்டு சம்பா கோயில் அருகே ஊர்வலம் முடிந்தது.

பிப்ரவரி 16ம் சனிக்கிழமை காலை 9 மணி அளவில் மங்கள இசையுடன் தமிழ்ச் சங்க பொறுப்பாளர் மற்றும் தலைவர் வி.முத்து முன்னிலையில் புதுவைக் கம்பன் கழகத் தலைவர் தமிழ்மாமணி நா.கோவிந்தசாமி அவர்கள் கொடியேற்ற மாநாடு தொடங்கியது மாநாட்டின் தொடக்க உரையாக முதலமைச்சர் உயர்திரு வே.நாராயணசாமி



அவர்கள் தலைமையில் தொடக்கப்பட்டது. தமிழ்ச் சங்க செயலாளர் திரு பொறிஞர் மு. பாலசுப்பிரமணியன் அவர்களால் வரவேற்புரை கொடுக்கப்பட்டது. மாநாட்டு மலர் உயர்திரு வே. நாராயணசாமி அவர்கள் கரங்களால் வெளியிடப்பட்டது. அடுத்த நிகழ்வாக புதிய நூல்கள் மாநாட்டு மேடையில் ஈரோடு பாவலர் சீனு. மோகன்தாசு எழுதிய "நல்வாழ்வு கீரைகள்" என்ற புத்தகமும், முனைவர் சுந்தர முருகன் எழுதிய "தமிழ்க்கனல் க.இராமகிருட்டினர்" என்ற புத்தகமும், அ.நந்தினி எழுதிய திருக்குறள் புத்தகமும், திராவிடத் தலைவர் கி வீரமணி அவர்கள் எழுதிய "தமிழுக்கு என்ன செய்தார் - பெரியார்'' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. மேலும் தமிழ்நெஞ்சம் பதிப்பகம் வெளியீடான கவிஞர் தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு எழுதிய "தென்றலின் தேடல்கள்", முனைவர் க.பாலதண்டாயுதம் எழுதிய "பழந்தமிழர் இலக்கியத்தில் குடும்ப அறம்", முனைவர் வி.தமிழ்மொழி எழுதிய "வைதீகம் / சங்க காலம் ஒரு வரலாற்றுப் பார்வை", மலர்மதி எழுதிய ''யார் அந்த நிலவு", பவ கணேஷ் எழுதிய "பவ கணேஷ் கவிதைகள்", மற்றும் தமிழ்நெஞ்சம் முத்திங்களிதழ், மேலும் பல தமிழ் எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

திருவள்ளுவர் அரங்கம், பாரதியார் அரங்கம், தொல்காப்பியர் அரங்கம், அகத்தியர் அரங்கம், மண்ணிசை அரங்கம், பட்டிமன்றம், கம்பர் அரங்கம், மனுநீதிசோழன் அரங்கம், சிந்தனை அரங்கம் மற்றும் ஆடல் அரங்கம் என பத்து அமர்வுகளை உள்ளடக்கி சிறப்பாக நடந்தது. திருக்குறளை தலைகீழா எழுதும் சாதனையை சாதனையாளர் செ.வெங்கடேசன் அவர்கள் தொடங்கினார்.ஞாயிற்றுக்கிழமை மாலையில் எழுதி முடித்தார்.

பிப்ரவரி 17ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாநாடு காலை 9 மணி அளவில் மங்கள இசையுடன் ஆரம்பிக்கப்பட்டது. இதில் மகளிர் அரங்கம், கவியரங்கம், இன்னிசை அரங்கம், பாவேந்தர் அரங்கம், வீரமாமுனிவர் அரங்கம், நக்கீரர் அரங்கம், என பல அரங்கங்கள் அமைத்து நிகழ்ச்சிகள் சிறப்பாகநடந்தது.இதில்பாராட்டுஅரங்கில் கலைமாமணி, தமிழ்மாமணி, எழுத்தாளர், பாவலர், முனைவர், பேராசிரியர் மற்றும் தமிழ் உணர்வாளர்கள் போன்ற 50க்கும் மேற்பட்ட தமிழ் பெரியோர்களை மேடைக்கு அழைத்து தலைவர் விஜிபி சந்தோஷம் அவர்கள் முன்னிலையில் மற்றும் முனைவர் வி முத்து தலைமையில் பொன்னாடை போர்த்தியும், நினைவுப் பரிசு கொடுத்தும் கௌரவிக்கப்பட்டார்கள். மேலும் குறளரங்கம், பிரபஞ்சன் அரங்கம் என 10 அமர்வு கொண்டு மாநாட்டு சிறப்பாக நடந்தது,

நிறைவு நிகழ்வில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக மேனாள்





துணைவேந்தர் சபாபதி மோகன் ,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலக்கிருட்டிணன் ,இந்திய கம்யீனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஆர் .முத்தரசன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். புதுச்சேரி தொழில் முதலீட்டுக் கழகத் தலைவர் இரா.சிவா ச.ம.உ அவர்கள் இந்நிகழ்வுக்கு தலைமை வகித்தார்

நிறைவுப் பேருரையாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித் தமிழர் முனைவர் தொல். திருமாவளவன் அவர்கள் தமிழின் தொன்மை, இன்றையச் சூழலில் தமிழையும் தமிழினத்தையும் காக்கும் முயற்சிகள் நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்து எழுச்சியுரை ஆற்றினார்

கடைசி நிகழ்வாக மாநாட்டுத் தீர்மானங்கள் படிக்கப்பட்டது.

1. புதுச்சேரி அரசால் 1965ஆம் ஆண்டு இயற்றப்பட்ட புதுச்சேரி ஆட்சிமொழிச் சட்டத்தை உறுதியாகவும், உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

2. வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், கடைகள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களின் பெயர் பலகைகளை தமிழ் எழுதப்பட வேண்டும் என்ற சட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

3. தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் தமிழ் வழிப் பள்ளிகளை தொடர்ந்து நடத்திட வேண்டும். எந்த காரணத்தைக் கொண்டும் அவற்றை மூடக்கூடாது.

4. தமிழ்வளர்ச்சித்துறை அமைக்கவேண்டும் என்று புதுச்சேரி தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ் உணர்வாளர்களை நெடுங்காலமாக அரசிடம் கோரிக்கை வைத்து வருகின்றனர். தமிழ்வளர்ச்சித்துறை அமைத்து தமிழ் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

5. கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு வழங்கப்படாமல் உள்ள தமிழ்மாமணி கருத்துக்களை உடனடியாக வழங்க வேண்டும். மேலும், கலைமாமணி விருதுகள் அறிவிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றை உடனடியாக அறிவித்து வழங்க வேண்டும்.

6. கலை, பண்பாட்டுத்துறை மூலம் புதுச்சேரி எழுத்தாளர்களின் நூல்கள் வாங்கப்பட்டு வந்தன. கடந்த சில ஆண்டுகளாக நூல்கள் வாங்கப்படவில்லை. நூல்களை உடனடியாக வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

7. புதுச்சேரி இலாசுப்பேட்டையில் கல்வி




நிறுவனங்கள் நிறைந்த சாலைக்கு தொல்காப்பியர் சாலை என்று பெயரிடப்பட்டுள்ளது. தொல்காப்பியர் சாலைஎன்பதைபுதுச்சேரிஅரசுஇதழில் வெளியிடுவதோடு அச்சாலையில் தொல்காப்பியர் சிலையையும் நிறுவ வேண்டும்.

8. புதுச்சேரிக்கு பெருமை சேர்த்த அண்மையில் மறைந்த எழுத்தாளர் பிரபஞ்சன்,தமிழறிஞர்இரா.திருமுருகன், இரண்டுமுறை சகதி அகடாமி விருது பெற்றுள்ள தமிழறிஞர் ம.இலெ.. தங்கப்பா, 200க்கு மேல் நூல்களை எழுதிய புதுச்சேரி மற்றும் தமிழக அரசின் விருதுகளைப் பெற்றுள்ள புலவரேறு அரிமதி தென்னகனார் ஆகியோரின் தமிழ்ப் பணியை பெருமைப்படுத்தும் வண்ணம் இவர்களின் பெயர்களை சாலைகளுக்கும், பள்ளிகளுக்கும் சூட்ட வேண்டும். மேலும், இவர்களின் சிலைகளை அமைத்திட வேண்டும்.

9. திருக்குறளை இந்திய திருநாட்டின் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி நடுவன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

10. புதுச்சேரி அரசு கவிதை, சிறுகதை, நாடகம், புதினம், கட்டுரை போன்ற பிரிவுகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் ''கம்பன்புகழ்இலக்கிய பரிசினை'' அளித்து வருகிறது. இதில் கவிதை நூல்களுக்கு மட்டும் ''கம்பன் புகழ் இலக்கியப் பரிசு'' என்றும், சிறுகதை, புதினம், நாடகம் கட்டுரை போன்ற புனைகதை பிரிவுகளுக்கு ''பிரபஞ்சன் புகழ் இலக்கியப் பரிசு'' என்று பிரித்து வழங்க வேண்டும்.

புதுச்சேரி மாநில பொன்விழா மாநாட்டில் கலந்துகொண்டு அரசியல் முக்கிய தலைவர்கள் எம்பி திரு கோகுல கிருஷ்ணன், எம்பி திரு ராதாகிருஷ்ணன், சபாநாயகர் திரு வைத்திலிங்கம், திரு லட்சுமிநாராயணன் எம்எல்ஏ, திரு அனந்தராமன் எம்எல்ஏ, திரு சிவக்கொழுந்து சட்டப் பேரவை துனைத் தலைவர் ,திராவிடத் தலைவர் கி வீரமணி முன்னாள் இந்நாள் நீதிபதிகள், அகில இந்திய தமிழ் சங்க தலைவர்கள் பொறுப்பாளர்கள் தொழிலதிபர்கள் போன்ற பலர் வருகை புரிந்து மாநாட்டைசிறப்பித்தனர்

கந்தன் திருமண மண்டபத்தில் மூன்று நாட்களுக்கு காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளிலும் சுவையான உணவு மாநாட்டில் பங்கு பெற்ற அனைவருக்கும் பரிமாறப்பட்டது. மாநாட்டில் வெளிநாட்டில் இருந்து பல தமிழறிஞர்கள் பங்குபெற்றனர். வெளிநாடு வெளிமாநில, வெளிமாவட்ட தமிழ் அறிஞர்கள், உணவாளர்கள் என இருநூறுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாநாட்டு அரங்குக்கு வெளியே ந.கோபிராமன் அவர்கள் ஏற்பாடு செய்த பழங்கால நாணயங்கள், தபால் தலைகள், அரிய பொருட்கள் போன்ற சிறப்பு வாய்ந்த கண்காட்சி அரங்கம் பொன்விழா மாநாட்டிற்கு மேலும் சிறப்பை சேர்த்தது. மேலும் பல புத்தக கடைகள் விற்பனைக்கு அரங்கம் போடப்பட்டது.

பொன்விழா தமிழ் மாநாட்டு மலர் 204 பக்கங்களைக் கொண்டு தலைசிறந்த தமிழ்

அறிஞர்கள் எழுதிய 81 கட்டுரைகள் உடன் 15 கவிதைகளும் சேர்ந்து மாநாட்டு மலரை மென்மேலும் அழகுபடுத்தியது. புதுச்சேரியின் பழங்காலத்தை நினைவுபடுத்தும் விதமாக 26 புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலைமாமணி திரைப்படப் புகழ் சித்தன் (செயமூர்த்தி) குழுவினரின் மக்களிசை நிகழ்ச்சி,சனார்த்தன்ன் குழுவினரின் நாட்டுப்புற இசை நிகழ்ச்சி கலைமாமணி முனைவர் நர்த்தகி நடராஜ் அவர்களின் நாட்டிய நிகழ்ச்சி ஆகியவை இலக்கிய இரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது. மாநாட்டுக்கு முன்னோட்டமாக ஓடும் பேருந்தில் ஓவியப் போட்டியும் நடத்தப்பட்டது 150 மாணவர்கள் கலந்துகொண்டு ஓடும் பேருந்தில் ஓவியம் வரைந்தனர். மேலும் புதுவைக் கடற்கரைச் சாலையில் 100க்கும் மேற்பட்ட ஓவியர்கள் கலந்துகொண்டு தமிழர்களின் தொன்மை பண்பாட்டை விளக்கும் ஓவியங்களையும் வரைந்தனர்.

மாநாட்டில்மலேசியா,சிங்கப்பூர்,பிரான்சு, இங்கிலாந்து, இலங்கை, மொரீசியஸ், சீனா. போன்ற வெளிநாட்டு பேராளர்கள் கலந்துகொண்டு இம்மாநாட்டை உலகத் தமிழ் மாநாடாக சிறப்பித்தனர்.

புதுவைத் தமிழ்ச்சங்க தலைவர்
முனைவர் வி முத்து,
செயலாளர்
மு.பாலசுப்பிரமணியன்,
பொருளாளர்
சீனு.மோகன்தாஸ்,
துணைத்தலைவர்
ந.ஆதிகேசவன்,
துணைத் தலைவர்
ப.திருநாவுக்கரசு,
துணைச்செயலாளர்
சீனு.கந்தகுமார் ,
அயலக செயலாளர்
குணவதி மைந்தன்,
ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள்
ஏ.பி.இபேர் தெலாப்பேர்ல்,
சு.அரிசுரேஷ்பாபு,
பா.அசோக்ராசா
மற்றும்
உறுப்பினர்கள் பங்கு பெற்றார்கள்.

கட்டுரை ஆக்கம்
காவலன் த.விஜயகுமார்,
(இ.இ.ப),
தவளகுப்பம், புதுச்சேரி.



# சந்தேகம்

## மலர்மதி

வருணும், ஊர்வசியும் ஒருவருக்கொருவர் உயிராய்க் காதலிக்கத் தொடங்கிய நேரம் அது. அப்போதுதான் எங்கிருந்தோ வந்து சேர்ந்தான் விஷ்ணு. வருண் வேலை பார்க்கும் அதே அலுவலகத்தில் புதிதாய் சேர்ந்தவன்தான் இந்த விஷ்ணு.

எடுத்த எடுப்பிலே மிகவும் நெருக்கமாகிப் போன விஷ்ணுவை மிகவும் நம்பினான் வருண்.

ஒரு நாள் பேச்சுவாக்கில் தன் காதலைப் பற்றி அவனிடம் சொன்னான் வருண்.

“வருண்... நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இந்தக்காலத்துப் பொண்ணுங்களை நம்பாதே. ரொம்ப மோசமானவங்க.” என்றான் விஷ்ணு.

“சேச்சே..ஊர்வசி அப்படிப்பட்ட பொண்ணு இல்லை. ரொம்ப நேர்மையான குடும்பத்தைச் சேர்ந்த ஒழுக்கமான பொண்ணு.” என்று நண்பனின் பேச்சை மறுதலித்தான் வருண்.

“என் பேச்சை நம்பலைன்னா போ. ஏதோ என் ஃப்ரெண்டாச்சேன்னு உன்னை எச்சரித்தேன். பிற்பாடு வருத்தப்பட்டுப் பிரயோஜனமில்லை. வேணும்னா நீயே அவளை சோதிச்சுப் பாரு. உண்மை வெளியே வரும்.” என்றான் விஷ்ணு.

வருண் யோசித்தான்.

‘ஒரு வேளை நண்பன் சொல்வது உண்மையாக இருக்குமோ? ஊர்வசியைச் சோதிச்சுப் பார்த்தால்தான் என்ன?’

சந்தேக வண்டு முதல் முறையாக அவன் மண்டையைத் துளைக்க ஆரம்பித்தது.

ஊர்வசியின் வருகைக்காகக் காத்திருந்தான் வருண்.

வந்ததும் வராததுமாக, “என்ன வருண், எதுக்கு என்னை அவசரமாக வரச் சொன்னீங்க? என்ன விஷயம்?” என்று கேட்டாள் ஊர்வசி.

“ஒண்ணுமில்லை. எத்தனை நாளைக்குத் தான் நாம இப்படி இருப்பது? அதனால...”

“அதனால..?”

“லாட்ஜ்ல ரூம் போட்டு ஜாலியா ஒரு நாள் இருந்துட்டு வருவோமே?”

முதலில் தயங்கியவள் யோசித்தாள்.

“என்ன யோசிக்கிறே?”

“ஒ..ஒண்ணுமில்லை வருண். யாருக்காவது தெரிஞ்சுப் போச்சுன்னா வம்பாயிடுமேன்னுதான் யோசிக்கிறேன்.”

“பயப்படாதே ஊர்வசி. ஒருவருக்கும் தெரியாமப் பக்கத்து ஊருக்குப் போயிருவோம்.” என தைரியமூட்டினான் வருண்.



“சரி வருண்..” என்றாள் மிரட்சியுடன்.

‘வாடீ... உனக்கு இருக்கு நாளைக்கு. நான்தான் கூப்ட்டேன்னா உனக்கெங்கே போச்சு அறிவு? அழைத்த உடனே வந்துட்டியே, நீ எவ்வளவு மோசமானப் பொண்ணா இருப்பே? அப்படீன்னு கேட்டு அவளோட போலியான முகத்திரையைக் கிழிக்கணும்.’

தீர்மானித்தவனாய் விடை பெற்றான் வருண்.

மறு நாள்.

சொன்ன இடத்திற்குச் சரியான சமயத்தில் வந்து சேர்ந்தாள் ஊர்வசி.

அவளுக்காக முன்கூட்டியே வந்து நின்றிருந்தான் வருண்.

அவன் பேச வாயெடுப்பதற்குள் அவள் பேசினாள்:

“வருண்.. உங்ககிட்ட ஒரு முக்கிய விஷயத்தைப் பத்திப் பேசணும்.”

“என்ன?”

“காதலுங்கறது உடம்பு சம்பந்தப்பட்ட தில்ல. மனசு சம்பந்தப்பட்டது. ஒருத்தர் மனசை இன்னொருத்தர் புரிஞ்சுக்கிட்டு வரம்பு மீறாமப் பழகறதுதான் உண்மையான காதல். தொட்டுத் தழுவி சுகம் காண்பதற்குப் பேரு காதலில்லை, காமம். உங்க மேல நான் அசைக்க முடியாத நம்பிக்கை வெச்சிருந்தேன். கடைசில நீங்க ஓர் அயோக்கியன்னு நிரூபிச்சிட்டீங்க. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பொண்ணுங்களைச் சீரழிச்சுட்டு ஓடிப் போற சரியான பேடிப் பயலுங்கறதைக் காட்டிட்டீங்க. முதல்ல நீங்க விளையாட்டுக்குத்தான் சொல்றீங்கன்னு நெனைச்சேன்.

ஆனா, உண்மையாகவே வந்து நிக்கறீங்க. நல்ல வேளை தப்புத்தண்டா எதுவும் நடக்கறதுக்கு முன்னால உங்க சுயரூபம் வெளிச்சமாயிருச்சு. சே... உங்க முகத்தைப் பார்ப்பதற்கே அருவெறுப்பா இருக்கு. இனிமேல் என் முகத்துல முழிக்கா தீங்க.”

சொல்லிவிட்டு அவனுடைய பதிலுக்கும் காத்திருக்காமல் ‘விருட்’டென கிளம்பி விட்டாள் ஊர்வசி.

பேரிடி ஒன்று தலையில் விழுந்த உணர் வுடன் அப்படியே நின்றுவிட்டான் வருண்.



# கால்முளைத்த கனவுகள்

நீட்டியிங்கே படுத்திருந் தமிழ ரெல்லாம்
நின்றுழைக்க முனைந்திட்டார்! இலவ யத்தைக்
காட்டியிங்கே அரசியலார் செய்து வந்த
கயமைக்கு முடிவுகட்ட விழ்ப்பு கொண்டார்
வாட்டியிங்கே வதைத்திட்ட மதுக்க டைகள்
வாசனையே இல்லாமல் விரட்டி விட்டார்
ஆட்டியிங்கே படைத்திட்ட மதங்கள் சாதி
ஆணவத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டார் !

ஆட்சியிலே ஊழலின்றித் திட்ட மெல்லாம்
அரும்பயனாய்க் கொட்டியது மக்கள் கையில்
காட்சியிலே எளியராக அமைச்ச ரெல்லாம்
கால்நடந்து மக்கள்தம் குறைக ளைந்தார்
போட்டியிட்டுத் தேர்தலிலே நிற்போ ரெல்லாம்
பொய்யான வாக்குறுதி தந்தி டாமல்
கூட்டணிகள் இல்லாமல் பணம்த ராமல்
கூன்நிமிர்ந்த நேர்மையிலே வாக்கு கேட்டார் !

தரகர்கள் இல்லாமல் சினப்பேச் சின்றித்
தாமதங்கள் இல்லாமல் உண்மை யாக
அரசாங்க அலுவலர்கள் கையூட் டின்றி
அன்றாடம் கோப்புகளை முடித்துத் தந்தார்
தரக்குறைவாய்ப் பாலியலின் சிந்தை யின்றித்
தன்னுடனே பிறந்தவளாய் ஆண்நி னைக்க
உரசல்கள் இல்லாமல் பெண்க ளெல்லாம்
உளம்மகிழப் பேருந்தில் பயணம் செய்தார் !

வீதிகளில் பெற்றோரே வெட்டிச் சாய்த்து
வீசியுடல் எறிகின்ற வெறிதா மின்றிச்
சாதிகளின் பேச்சின்றி மனம்க லந்தோர்
சாகாமல் திருமணம்தான் புரிந்து கொண்டார்
பாதியுடல் பொன்நகையால் பூட்டிக் கையில்
பணக்கட்டு தரவேண்டும் எனக்கேட் காமல்
ஆதியிங்கே இருந்ததுபோல் பொருளைத் தந்தே
ஆண்களெல்லாம் பெண்களினை மணந்து கொண்டார்

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



மலைகளினைத் தகர்க்கவில்லை! வளர்ந்தி ருந்த
மரங்களினை வெட்டவில்லை! ஆற்றி லெல்லாம்
அலைகளோடும் மீன்களோடும் தண்ணீ ரோட
அள்ளிடாமல் மணல்படுகை அழகு கொஞ்ச
விலைபேசித் தூய்மையினை விற்றி டாமல்
வீண்கழிவைக் காற்றினிலே கலந்தி டாமல்
குலையாமல் இயற்கையினைப் பேணிக் காத்துக்
கூறும்நோய் ஏதுமின்றி வாழ்கின் றார்கள் !

ஏரிகுளம் எல்லாமும் தூரை வாரி
எழிலோடு திகழ்கிறது நீர்நி றைந்தே
ஊரினையே கடந்துவந்த புட்க ளெல்லாம்
உரிமையுடன் இணைகளொடு திரியுதங்கே
தாரினையே வாழவைக்கும் பசும்வ யல்கள்
தகுமனையாய் மாறிடாமல் விளையு தங்கே
சேரியோடு சுற்றுபுறச் சூழ லெல்லாம்
செழுமையாக மாசின்றித் திகழு தங்கே !

வணிகமாக விற்கின்ற கல்வி தன்னை
வாங்காமல் இலவயத்தில் கற்கின் றார்கள்
மணியான தமிழ்வழியைப் பள்ளி யெல்லாம்
மணக்கவைத்தே ஆங்கிலத்தைத் தூக்கெ றிந்தார்
கணினிக்குள் நுழைந்திட்ட தமிழை வீட்டுள்
கடைத்தெருவில் மழலைநாவில் ஒலிக்க வைத்தார்
பணியெல்லாம் தமிழ்வழியில் படித்த வர்க்கே
பாங்காகக் கிடைப்பதற்குச் சட்டம் செய்தார் !

வன்மமில்லை பொறாமையில்லை வஞ்ச மில்லை
வாய்ச்சொல்லில் கடுமையில்லை புறஞ்சொல் லில்லை
அன்பொன்றே வேதமென அனைவர் ஒன்றாய்
அரவணைத்து வாழ்கின்றார் நேயத் தோடே
புன்மையிலா இத்தகைய தமிழ கந்தான்
புலந்திடவே நான்கண்ட கனவுக் கிங்கே
நன்றாகக் கால்முளைத்து நடக்க வேண்டும்
நல்வளத்தில் தமிழரெல்லாம் ஓங்க வேண்டும் !



## சுந்தர பாண்டியன்

# வேப்பமரத்து விருந்தாளிகள்

**வீ**டுகட்டும் வேலை நடந்துக் கொண்டிருந்தது. சுற்றிலும் கல்லும், மண்ணுமாய் குவிக்கப்பட்டிருந்தது. வேலையாட்கள் பரப் பரப்பாக வேலையில் ஈடு பட்டிருந்தார்கள்.

இங்கப் பாருப்பா! இந்த செங்கல் எல்லாம் மேல போகணும். ஒரு நாலுபேர் பின்பக்கம் பூச்சு வேலையை முடிங்க! நாளை காலையில முன்பக்க வேலைக்கு சாரம் கட்ட ஆட்கள் வந்திடுவாங்கன்னு அந்த வீட்டைக் கட்டும் பொறுப்பை ஏற்றுள்ள பொறியாளர் எல்லோரையும் வேலை வாங்கிக் கொண்டிருந்தார்.

வேலை செய்யும் ஆட்கள் முன்னும் பின்னுமாக நகர்ந்துக் கொண்டிருந்தனர். அவன் பொழுது விடியும் முன் அவ்வீட்டிற்கு வருவான். என்னென்ன வேலைகள் நடந்துள்ளன என்று பார்ப்பான். எங்கெங்கு தண்ணீர் பிடிக்க வேண்டுமோ, அங்கெல்லாம் தண்ணீர் பிடிப்பான். பின்னர் பையிலிருந்து தான் வாங்கி வந்துள்ள போண்டாவுடன் மேல் மாடிக்குச் செல்வான்.

போண்டாவைத் துண்டு துண்டாக நான்கு பக்கமும், பிய்த்துப் போட்டுவிட்டு மறைவாக நின்று பார்த்துக் கொண்டிருப்பான். கொஞ்ச நேரத்தில் அணிலொன்று அந்த வேப்ப மரத்திலிருந்து இறங்கிவந்து, பிய்த்துப்போட்ட போண்டா துண்டுகளிலொன்றை எடுத்து தின்ன ஆரம்பிக்கும். முதல் விருந்தாளி எப்பவுமே அந்த அணில்தான். அடுத்த சில நிமிடங்களில் மாநிறத்தில் குயில் ஒன்று பறந்து போண்டா துண்டை எடுத்துக்கொண்டு வேப்ப மரத்தில் உட்காரும். மைனா, காகம், தவிட்டுக் குருவிகள் என ஒரு படைவந்து அந்த வேப்ப மரத்திலிருந்து இறங்கிவந்து அவன் பிய்த்துப்போட்ட போண்டா துண்டுகளை கவ்விச்செல்லும். இது தினந்தோறும் நடக்கும் வாடிக்கைச் செயல்கள். சில நேரங்களில் வேறு ஏதும் தின்பதற்கு விர்ந்தாளிகளுக்கு கிடைக்கும்.

அந்த வீட்டின் முன்னால் நின்று கொண்டிருக்கும் வேப்ப மரங்கள் இரண்டும்தான் இந்த விருந்தாளிகளுக்கு இடம் கொடுத்து தங்க வைத்திருந்தது.

மரம் என்றால் கொஞ்சம் முரடாய் அடர்ந்த இலைகளோடு, கிளை பரப்பி, கோவில் கருவறை, முன் மண்டபத்தின்,

இரு பக்கமும் நிற்கின்ற துவார பாலகர்கள் போல அந்த வீட்டின் முன்பக்கம் இந்த இரண்டு வேப்ப மரங்களும் நின்றிருந்தன. அந்த மரம் எவ்வித குறையுமின்றி தன் வேலையை செய்துக் கொண்டிருந்தது. பருவ நிலைக்கு ஏற்ப இலைகளை உதிர்ப்பது, தளிர்ப்பது என தன் வேலையை செய்துக் கொண்டிருந்தது. இலைகள் உதிர்ப்பதென்றால், சும்மா இல்லை. வானத்திலிருந்து பூமழைப் பொழிவதுபோல் பொல பொல என்று உதிரும். தரையெங்கும் பச்சை, பழுப்பு, ஒருவித வெளிர் மஞ்சள் நிறத்தோடுத் தரையை மூடியிருக்கும். அதை கூட்டி அள்ள அள்ள மீண்டும் மீண்டும் கொட்டிக் கொண்டே இருக்கும். தன் மேலுள்ள அத்தனை இலைகளும் கொட்டி மரம் நிர்வாணமாகிவிடும். அதற்குள் அதை கூட்டி அள்ளுபவர்கள் இந்த மரத்தை வெட்டுனாதான் என்ன என்று திட்டுவார்கள். அதைக கேட்டுக் கொண்டு அந்த மரங்கள் தேமே என நிற்கும்.

இலைகள் கொட்டித் தீர்த்த ஓரிரு நாட்களுக்குள், பச்சை பசேலென துளிர்கள் தளிர்த்து மீண்டும் அடர்த்தியாய் மரமெங்கும் பச்சையாய் குலுங்கி நிற்கும்.

அடுத்த வேலையை அந்த மரங்கள் தொடங்கும். மரமெங்கும் கொத்துக் கொத்தாய் காய்களும் பழங்களுமாய்த் தொங்கும். பின்னர் ஒவ்வொன்றாய்கொட்டத்தொடங்கும்.பழங்கள், தோல்கள், விதைகள் என கூட்டுபவர்களின் வேலையே அதிகரிக்கச் செய்யும். மீண்டும் அந்த மரங்கள் திட்டு வாங்கும்.

வீட்டுவேலைவேகமாய்வளர்ந்து, முகப்பு முன்தோற்ற வேலைகள் தொடங்கின. இதுவரை அந்த வீட்டிற்கு வேலை செய்ய வந்தவர்களெல்லம் இங்கேதான் வெயில் தெரியாமல் வேலைப் பார்க்கிறோம். நல்லா குளுமையா இருக்கு. இந்த மரங்களை வெட்டிடாதீங்க என்றும், வெயில் காலத்தில் மிகப்பெரிய மூலிகையென்றும் சொன்னவர்களும் உண்டு. இதையும் அந்த மரங்கள் கேட்டுக்கொண்டுதான் இருந்தன.

அது மட்டுமா? தற்போது வளர்ந்துவரும் வீட்டின் புதுக்கதையும், முன்னால் இருந்த பழைய வீட்டின் கதையும் அந்த இரு வேப்ப மரங்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்த வீட்டின் சச்சரவுகள், சிரிப்புகள், வாக்குவாதங்கள், மௌனம் என அத்தனைக்கும் சாட்சியாய் அந்த மரங்கள் வேரூன்றி நின்றிருந்தன.

மரத்தை வெட்ட வேண்டாம். கிளைகளை எல்லாம்கழிச்சிவிட்டாபோதும்.இவ்வாறு ஆளுக்கு ஆள் அந்த மங்களைப்பற்றி பேசிச் சென்றனர்.

வீட்டின் முகப்புத் தோற்ற வேலைகள் ஆரம்பித்தாயிற்று. மரத்தைக் கழிச்சி சுத்தப் படுத்தினால் முன் முகப்பின் அழகு தெரியும். அந்த வீட்டின் உரிமையாளர் கவலையானார். மரம் வெட்டப்பட்டுவிடுமோ? கிளைகளை முறித்து முடமாக்குவார்களோ? வெளியில் சொல்ல இயலாமல் மனம் தத்தளித்தது. வேலைகள் ஏறக்குறைய முடிவுக்கு வந்தன. பொறியாளர் மரத்தை ஏதும் செய்யாமல் வேலையை முடித்திருந்தார். புதுமனை புக நாள் குறிக்கப்பட்டு, மனை புகுந்து ஒருவாறு ஆரவாரம் அடங்கியது.

பருவமழைத் துவங்கியதாக தொலைக் காட்சியில் அறிவிக்கப்பட்டது. மழையும் வந்து போனது. மேகங்கள் கறுத்து விலகின. அந்த மழைநாளில் ஒருநாள், புயலொன்று மையம் கொண்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவித்தது. கஜா எனும் பெயரில் புயலின் வள்ர்ச்சி படிப்படியாக கவனிக்கப்பட்டு வந்தது. நகரும் திசை, வேகம், அதன் வளர்ச்சியென வானிலை அறிக்கைச் சொல்ல, மனிதர்கள் அந்த அறிவிப்பைச் சட்டைச் செய்யாது இடவளமாய்த் திரிந்தார்கள். செல்பேசிகள் மீம்ஸ் போட்டு மின்சாரத்தை செலவழித்தார்கள்.

இரவு மணி 11. லேசாந்த் தூறலோடு வானம் மழையை இறக்க ஆரம்பித்தது. நேரம் நகர, நகர காற்று மெதுவாக ஊருக்குள் நுழைந்தது.

நள்ளிரவு மணி 12. தொலைபேசி அழைப்பு



ஒன்று புயலைப்பற்றி விசாரிக்க, லேசா கற்றுவீச, மழையின் தூறல் இருக்கு என பதில் கூறினான். அத்துடன் அலை, தொலைபேசிகளும், மின்சாரமும் ஓய்ந்து போயின.

நேரம் கரைய, கரைய காற்று முழு பலத்துடன் வீசத் துவங்கியது. மணி 4. பேயாய் கற்றும், மழையும் சுழல ஆரம்பித்தன. இருட்டில் சன்னல் வழியாகப் பார்த்தபோது மரங்கள் தலைவிரித்தாடின. தட்டுமுட்டு சாமான்கள் அங்குமிங்குமாக அலைகழிக்கப்பட்டன.

மணி 4.30க்கு ஒரு மயான அமைதி. சட்டென காற்றும் மழையும் நின்று ஒரு நிசப்தம். அடுத்த 5வது நிமிடத்தில் மீண்டும் காற்று தனது கோர முகத்தைக் காட்டியது. வானம் தன்னிடம் உள்ள தண்ணீரை எல்லாம் கொட்டித் தீர்த்தது.

ஒருவாறு பொழுதுவிடிய, வெளியில் வந்து பார்த்தபோது, புயலின் வேகம் தெரியவந்தது. வீட்டிற்கு வெளியே நின்றிருந்த வேப்பமரத்தின் கிளைகள் யாவும் முறிக்கப்பட்டு முடமாகிக் கிடந்தன. ஆனால் மரம் கீழே விழவில்லை. அந்த ஒரு ஆறுதலைத் தவிர, வேறு ஒன்றும் பெரிதாகச் சொல்லமுடியவில்லை..

சாலைக்கு வந்தபோது, சாலையெங்கும் மரங்கள், ஏதோவொரு காட்டுக்குள் செல்வது போல் இருந்தது. மரங்கள் யாவும் போர்க்களத்தில் நின்றிருந்த வீரர்கள் வெட்டுண்டு கிடப்பதைப்போல சாய்ந்து கிடந்தன. ஊரமெல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிய வீட்டுக்காரர், அந்த இரு வேப்ப மரங்களை அண்ணாந்துப் பார்த்தார் கண்களிலிருந்து உருண்டோடிய இரு நீர்த்திவலைகள் அந்த வேப்பமரத்து விருந்தாளிகளை எண்ணிப் பார்த்தது.

மனிதர்கள் கூட்டம், கூட்டமாக இடமும், வலமுமாக அலைந்தார்கள். ஒருவருக்கு ஒருவர், தங்களின் சேதங்களைப்பற்றி கலந்தார்கள். கலைந்தார்கள். பல இடங்களில் சுய நலமும், சில இடங்களில் பொது நலமுமாய் மனித மந்தைகள் அலைந்தன.

அவன் அந்த வேப்ப மரத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். இனி எப்போது இவைகள் இலைகளை உதிக்கும். மீண்டும் துளிர்விடுமா? நிலப்பரப்பையே போர்வையாய் மூடியிருந்த நிழல் எப்போதுவரும்? தங்கநிறமாய் மின்னும் மஞ்சள் நிறப் பழங்களை எப்போது பார்க்கலாம்? காக்கைகளும், கெச்சட்டமிடும் மைனாக்களும் வந்தமர்ந்து, கிளையெங்கும் தாவியோடிய அணிற்பிள்ளைகளும் வருமா? இனி அந்த விருந்தாளிகளைக் காணமுடியுமா என எண்ணுகையில் கூடுதேடி பறவைகள் பறப்பதை கனத்த மனதோடு அவன் பார்த்துக் கொண்டே இருந்தான். எப்போதும்போல, அம்மரங்கள் தேமே என்று நின்றிருந்தன. ■

# மனசு



ஆள் அரவமற்ற மயான மனசின்
பிழையான பிம்பத்துக்குள்
ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள்
உங்களை நீங்கள் இழந்தவாறே...

அதற்குள்தான் எத்தனை பிளிரல்கள்,
எத்தனை பிதற்றல்கள் ,
எத்தனை அபிநயங்கள்,
எத்தனை தேம்பல்கள்,
எத்தனை குரூரங்கள்

உலகின் முதல் மறைந்து தாக்கவல்ல
தீயதும் தூயதுமான அனிச்சையெனும்
தானியங்கி அது

வசிக்கும் ஜீவராசிகளின்
ஒட்டுமொத்த பலமும் அதற்குண்டு,
எப்போதும்  அது பயன்பாடு பார்த்தே
பரிணாமம் அடைகிறது

உள்ளேறிய இரத்தம், சதைக்குள்ளும்
ஆகாய வெறுமைக்குள்ளும்
புரண்டு வாழக்கூடியது

அடர்ந்த பின்புலம் கொண்ட
புரிய முடியா இயற்கையின்
ஆற்றலை கவர்ந்து
படிப்படியாக அணுக்களைக்
கலந்து படைக்கப்பட்டது

அதிரடி தலையும், மேலோட்ட வாலும்
அதற்கானது என்ற புள்ளியில்தான்
திமிரோடு வசித்துக்கொண்டிருக்கிறது

ஆணெனில் அகங்கார கோசத்தோடும்
பெண்ணெனில்அடர்ஆழ மாயையோடும்
ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு
கரும்புள்ளி, செம்புள்ளி வேசத்தோடு
நடைபோட்டுக்கொண்டிருக்கிறது

இங்கே, மனம் என்ற வஞ்சமெனும்
போர்வைக்குள் தங்களை மூடி
மறைத்துக்கொண்டு
வெளிப்படையாய் திரிகிறார்கள்
பெரும்பாலான மனிதர்கள்

விதி விலக்காய் சிலர்
அப்பட்டமாய் திறந்து கிடக்கும்
மணல் வெளி பிரதேசமாய் மனதை
புடம்போட்டு மனிதாபிமானத்தை
தோளில் சுமைந்தலைகிறார்கள்

உங்களிலிருந்து நீங்கள் மாறுபட்டு
அப்படியுமின்றி, இப்படியுமின்றி
நடு நிலைக்குள் உங்களைப்புதைத்து
யாருக்கும் பாதகம் செய்யாது
மரித்துப்போனாலே போதும்தான்

அதை விடுத்து
ஆள் அரவமற்ற மயான மனசின்
பிழையான பிம்பத்திற்குள்
ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள்
உங்களை நீங்கள் இழந்தவாறே

இப்படியான,அனைத்தையும் துறந்து
மனதை நிர்வாணப்படுத்தலாம்
வாருங்கள்....

ஒவ்வொரு முறையும்
திறந்த மனதோடு அயராது மலர்ந்து
மனம் வீசிக்கொண்டிருக்கும்
அந்தச் செடியின் பூக்களைப்போல!

- மு. இளையா



# அழகர் கோயில்..!!

.

மதுரை வட திசையில் அழகர்மலை
குதிரை ஏறி வரும் கள்ளழகன்
சித்திரை நாயகனாய் அழகனவன்
பதினெட்டாம் படி கருப்பு காவல் தெய்வம்!

.

உச்சி மலை மீது தீர்த்தக்கரை
உள்ளம் குளிர வைக்கும் நீராடல்
உயர்வாய் நிற்கும் அம்மன் ராக்காயி
மிளிர்வாய் காத்தருளும் தாயவளே!

.

பழமுதிர்ச் சோலையின் பசுமையிலே
பக்தர் அருள் பாலும் முருகனவன்
ஆறாம் படைவீடு அழகனவன்
அன்பின் சிவனவன் பிள்ளையவன்!

.

ஔவைக்கு பழம் ஈந்த அழகர்மலை
அழகன் முருகன் கண்ட திருவிளையாடல்
புதைந்து தோன்றி நிற்கும் தெப்பக்குளம்
புண்ணிய தளமாக மதுரை அழகர் கோயில்!

.

**- கவிஞன் சேகர் மருது**



# ஹைக்கூ

பூங்காவின் அழகு
முகம் சுளிக்க வைக்கிறது
காதலர்களின் சேட்டை

●

அம்மாவின் காதல்
குறைந்து கொண்டே வருகிறது
தந்தையின் கோபம்

●

காதலர் தினம்
முன்கூட்டியே உறுதியாகிறது
உல்லாச பயணம்

●

அடுப்பில் சமையல்
அடிக்கடி இசை பாடுகிறது
அன்னையின் ஊதுகுழல்

●

மாட்டின் வால்
தொடத்தொட அதிகமாகிறது
சலங்கையின் ஒலி

●

சிறுவனின் மகிழ்ச்சி
ஆற்றை கடக்கையில் மறைகிறது
கரையோர மீன்கள்

●

மழைத்துளி சொட்டுகையில்
தலையாட்டி ரசிக்கின்றன
கொடியில் மலர்கள்

●

குழந்தையின் அணைப்பு
முற்றிலும் விலகியது
அன்னையின் உறக்கம்

●

காவல் தெய்வம்
கெட்டியாய் பிடித்திருக்கிறது
கையில் அருவாள்

●

திருவிழா கூட்டத்தில்
காணாமல் போகிறது
கூத்தாடியின் பசி

●

வாய்பேசாத குழந்தை
திரும்பி போகச்சொல்கிறது
வாத்து கூட்டம்

●

ஆகாய மேகங்கள்
காற்றோடு ஒன்றுசேர விழுகிறது
மண்ணில் மழைத்துளி

●

கணிதத் தேர்வு
கூட்டி பெருக்குகிறாள்
ஏழை சிறுமி

●

ஜீவா, திருநெல்வேலி

# பாலை வனத்தில் தண்ணீருக்கு அலைபவனைப் போல நான் படிப்பதற்கும் எழுதுவதற்கும் அலைபாய்கிறேன்

## மு.பாலசுப்பிரமணியன்


**கவிஞர் மு.பாலசுப்பிரமணியன் பொறியாளர். புதுச்சேரி பொதுப்பணித் துறையில் உதவிப் பொறியாளராக பணியாற்றுகிறார். புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் செயலராக கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் மூன்று முறை தேர்தலில் போட்டியிட்டு மூன்றாவது முறையாக செயலராக. தேர்ந்தெடுக்கப் பட்டு செயல்படுகிறார். நடைவண்டி சிறுவர் கலை இலக்கியக் கழகத்தை நிறுவி சிறுவர்களுக்கும் இளம் எழுத்தாளர்களுக்கும் வாய்ப்புகளை வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறார். புதுவையின் குறிப்பிடத் தக்க எழுச்சி கவிஞராகவும், அழவள்ளியப்பா விருது பெற்ற குழந்தை எழுத்தாளராகவும் தன் படைப்புகள் மூலம் அறியப்படுகிறார். தொடர்ந்து நவீன இலக்கிய வாசிப்பிலும் மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை, லிமரைக்கூ கவிதை, மொழிபெயர்ப்புக் கவிதைகள், சிறுகதைகள், நூல் விமர்சனம் என பன்முகத் திறனாளியாக விளங்கி வருகிறார். அரங்க கவிதைகளில் தனக்கான சிறப்பான இடத்தைப் பெற்று அனைவரின் பாராட்டையும் பெற்று வருகிறார்.**

தமிழ்நெஞ்சத்துக்கான அவரின்

## நேர்காணல்

**அடிப்படையில் பொறியியல் வல்லுநரான உங்களுக்கு கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?**

பள்ளியில் படிக்கும்போதே தமிழ்ப் பாடங்களையும் செய்யுள்களையும் மனப் பாடம் செய்யும் ஆற்றல் எனக்குள் இருந்தது. என் ஆற்றலை அறிந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி என எல்லாவற்றிலும் பங்கெடுக்க வைத்தார்கள். உயர்நிலைப் பள்ளியிலும் அப்படியே ஆர்வத்தோடு கலந்துகொண்டு போட்டிகளில் பங்கெடுத்து பல பரிசு களைப் பெற்றிருக்கிறேன். கல்லூரியில் படிக்கும்போது என் நண்பர் கோனேரி இராமசாமியின் நட்பால் அது இன்னும்



விரிவடைந்தது. பிறகு புதுச்சேரி மாநில கலை இலக்கியப் பெருமன்றத்தில் இணைந்து செயல்பட்டேன். ஒரு கவிஞனாக, கலைஞனாக என்னை அடையாளப்படுத்தியது கலை இலக்கியப் பெருமன்றம். கலையார்வம் என் பிறப்பி லேயே வந்தது எனத்தான் சொல்ல வேண்டும் . ஏனென்றால் என் தந்தையும் ஒரு தெருக்கூத்து கலைஞர். பாட்டும் கூத்தும் குழந்தைப் பருவம் முதல் பாட்டும் கூத்தும் எனக்கு கலைத்துறையில் நாட்டத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

**உங்களின் ஆதர்சமாகக் கருதக் கூடியவர்களைப்பற்றி நினைவுகளைப் பகிருங்கள்.**

என் அப்பா அண்ணல் அம்பேத்கர் ,தந்தை பெரியார், தோழர் வ.சுப்பையா, பாரதி, பாரதி தாசன் கவிஞர் தமிழ் ஒளி ஜெயகாந்தன், கோனேரி இராமசாமி, கவிஞர் பரிணாமன், எழுத்தாளர் கோணங்கி, கவிஞர் மீனாட்சி, எழுச்சித் தமிழர் முனைவர் தொல்.திருமாவளவன் இப்படி பல ஆளுமைகள். இவர்களால் ஒரு தெளிவான சிந்தனைக்கும் எனக்கான அரசியலுக்கும் என்னை தாயார்படுத்திக்கொள்ள முயன்று கொண்டிருக்கின்றேன்.

**எத்தகையகுடும்பச்சூழலிலிருந்து வந்து இத்தகைய உச்சியை அடைந்த தாக கருதுகிறீர்கள்?**

ஒரு சாதாரண நகரசுத்தி தொழிலாளி யின் மகனாகப் பிறந்து என் அப்பாவின் கடுமையான உழைப்பிலும் முயற்சியிலும் கல்வி கற்று உயர்ந்திருக்கிறேன். நான்கு தங்கைகள் ஒரு தம்பியின் மூத்த அண்ணனாக பிறந்து முடிந்தவரை உழைத்திருக்கிறேன். குடும்பத்தைவிட பொதுப்பணியில் தான் எனது ஆர்வமும் உழைப்பும், பொருளும் செலவாகியிருக்கின்றது. நான் எதிர்பார்க்காத அளவு உயர்ந்திருக்கிறேன் இது மகிழ்ச்சிதான்.

**நீங்கள் பெற்ற விருதுகளைப் பற்றி ...**

விருதுகள், பரிசுகள், பாராட்டுகள் நிறையப் பெற்றிருக்கிறேன். புதுச்சேரி அரசின் சிறந்த நூலுக்கான பரிசுகள் என் நடைவண்டி சிறுவர் நூலுக்கு நேரு குழந்தை இலக்கியப்பரிசும்,வாழப்பிறந்தோம்கவிதை நூலுக்கு கம்பன் புகழ் பரிசும் கிடைத்து குறிப்பிடத் தக்கவை. என் அன்னப்பறவை நூலுக்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் குன்றக்குடி அடிகளார் விருதும், மலேசிய தமிழ் அமைப்பின் தமிழ்மாமணி விருதும் குறிப்பிடத்தக்கன. மேலும் விருதுகள் பரிசுகள் என 50க்கும் மேற்பட்டவை அளித்து இந்த தமிழ் சமூகம் என்னை பெருமைப் படுத்தியுள்ளது.

**கலைத்துறையில் உங்களின் சாதனயாக எதைக் கருதுகிறீர்?**

பத்து புத்தகங்கள் எழுதியிருக்கிறேன் இன்னும் 5 புத்தகங்கள் வெளியிட தாயாராக உள்ளது. பல நாடகங்களில் நடித்துள்ளேன். குறிப்பாக வேலு சரவணன் இயக்கத்தில் சூறாவளி நாடகம், பாரதி வாழ்க்கை வரலாற்று நாடகத்தில் கனகலிங்கமாக நடித்தது. அந்தமான், கேரளா, இமாச்சல பிரதேசம், தமிழகம், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தெருக்கூத்தில் நடித்துள்ளேன். 500க்கும் மேற்பட்ட கவியரங்குளில் கவிதை வாசித்துள்ளேன். சாகித்திய அகாடெமி, பொதிகைத் தொலைக்காட்சி, வானொலி, தனியார் தொலைக்காட்சிகள், என கவியிரங்கம், கருத்தரங்கம் என கலந்துகொண்டு என் பணியை நிறைவாக செய்திருக்கிறேன். இன்று எழுதிக்கொண்டிருக்கும் அத்தனை எழுத்தாளர்களையும் நேரில் சந்தித்தும் அவர்களின் படைப்புகளைப் படித்தும் விவாதித்து வருகிறேன். முகநூல் இணையம் கட்செவி என ஓயாது இயங்கிக்கொண்டே இருக்கிறேன். இவையெல்லாம் எனக்கு கிடைத்த பேறு.

**கொண்டாட்ட மனப்பான்மை உங்களுடையதென அறிவேன்.. யாரை எங்கனமாகக் கொண்டாட எண்ணுகிறீர்?**

எப்போதும் கொண்டாட்ட மனப் பான்மையோடிருப்பது மகிழ்ச்சிதான். குழந்தை களைக் கொண்டாடுவது என்பது எனக்கு எப்போதும் உற்சாகத்தையும் எழுச்சியையும் அளிக்கக்கூடியது. குழந்தைகளோடு பேசுவது, விளையாடுவது அவர்கள் பேச பாட, கேட்பது எல்லாம் எனக்கு மிகவும் பிடித்தமானது. அவர்களை பாராட்டுவதும் பரிசுகள் அளித்து மகிழ்வதும் மகிழ்ச்சியானது. அடுத்து பெண் படைப்பாளிகள், கலைஞர்கள் கவிஞர்கள், இளைய படைப்பாளிகளை கொண்டாடுவதும் அவர்களுக்கான மேடைகளை, வாய்ப்புகளை ஏற்படுத்திகொடுத்து மகிழ்வதும் எனக்கு தனித்த மனநிறைவையும் இன்பத்தையும் தரக்கூடியது. எழுத்தாளர்களை, கலைஞர்களை கொண்டாடுவது என் பெருமையாக உணர்கிறேன்.

**குழந்தைகளுக்கான கவிதை நூலுக்கு விருது வாங்கிய உங்களின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வருவதை அறி கிறேன். அது குறித்துச் சொல்லுங்கள்?**

என்னுடைய சிறுவர் பாடல் நூல்கள் நடைவண்டி புதுவை அரசின் விருது பெற்றது. சிட்டுக்குருவி பிரான்சு கம்பன் விழாவில் வெளியிடப்பட்டது. மரக்குதிரை நல்ல வரவேற்பை பெற்றது. அன்னப்பறவை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தவத்திரு குன்றக்குடி அடிகளார் விருதைப்பெற்றது. அன்னப்பறவை நூலினை, ஆதித்தியா வித்யாசரம பள்ளியின் ஆங்கில ஆசிரியர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கிறார். முனை வரும் சமூக செயல்பாட்டாளருமான பெண்ணியம் செல்வகுமாரியின் பெருமுயற்சி யில் மொழிபெயர்ப்பு நடைபெறுவது மகிழ் வான ஒன்று.

**நடைவண்டி சிறார் இலக்கிய கலைக் கழகம் பற்றி...**

நடைவண்டி சிறுவர் கலை இலக்கியக் கழகம் சிறுவர்களின் படைப்பாற்றலையும் கலைத்திறனையும் வெளிப்படுத்தி அவர்களுக்கு வழிகாட்ட தொடங்கப்பட்ட அமைப்பு இப்போது சிறு சிறு நிகழ்வுகள் சிறுவர்களுக்காக நடத்தப்படுகின்றன. அதைப்போலவே புதுமுக எழுத்தாளர்களின் புத்தக வெளியீடுகள் நவீன இலக்கிய சந்திப்புகள் போன்றநிகழ்வுகளையும்நடத்திவருகிறோம்.



வருங்காலத்தில் சிறுவர்களுக்கான இதழ் ஒன்றையும் நூலகம் ஒன்றையும் அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளேன் விரைவில் தொடங்கப்படும்.

**புதுவைத் தமிழ்ச் சங்கச் செயலா ளராக விளங்குவதோடு பல்வேறுபட்ட சமூகச்சேவைகள் செய்து வருகிறீர்கள். எப்படிப்பட்ட அனுபவத்தை இதிலிருந்து பெறுகிறீர்கள்?**

இலக்கியத்துறையில் 30 ஆண்டு களுக்கு மேலாக இயங்கினாலும் புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் செயலராக 2010 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்றாவது முறை செயலராக தேர்தலில் வெற்றி பெற்று செயலாற்றி வருகிறேன். பல சிறப்பான இலக்கிய நிகழ்வுகளை, கவியரங்கம்,

# முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி

கருத்தரங்கம், பயிலரங்கம், போன்ற நிகழ்வுகளை நடத்தி வருகிறேன். பல நிலைகளில் போராட்டம், பொதுத்தொண்டு என செயல்பட்டு வருகிறேன். பாராட்டுகளும் வசைகளும் சேர்ந்தே வருகின்றன. பொது வாழ்வில் பாராட்டுகளை விட குறை சொல்பவர்கள் முன்வரிசையில் நிற்கிறார்கள். தட்டிக் கொடுத்து செயல்பட வைப்பவர்கள் நாம் சரியானவர்களாக உதவுகிறார்கள். என்னால் முடிந்தவரை அனைவரையும் அரவணைத்து அடுத்தவரை கைபிடித்து மேலேற்றி விடவே உழைக்கிறேன்.

**கலைச்சேவைசமூகச்சேவையென ஒரு சக்கரம் போல் சுழல்கிறீரே..வாழ்வின் நோக்கம்தான் என்ன?**

பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் என்னால் முடிந்ததை செய்ய வேண்டும். கற்பதற்கும் தெரிந்து கொள்வதற்கும் இந்த உலகத்தில் நிறைய இருக்கின்றன அவற்றை தெரிந்தும் அறிந்தும் உயர வேண்டும். வாங்கி வைத்துள்ள புத்தகங்களை எல்லாம் படித்துவிட வேண்டும் நிறைய எழுத வேண்டும் என்ற தேடலே என் வாழ்வின் நோக்கம்.

**நீங்கள் இன்னும் எதையாவது கண்டடையதேடிக்கொண்டுஇருப்பதாக உணர்கிறீர்களா?**

தேடல் தான் வாழ்க்கை. ஒரு பொறியாளனாக பணி செய்தாலும் படிப்பதிலும் எழுதுதிலும் என்னுடைய கவனம் முழுக்க செல்கிறது. பாலை வனத்தில் தண்ணீருக்கு அலைபவனைப் போல நான் படிப்பதற்கும் எழுதுவதற்கும் அலைபாய்கிறேன். குழந்தைகளுக்கு எழுதிக் குவிக்க வேண்டும் என்ற பேராசையும் என்னுள் குவிந்து கிடக்கிறது.

**இன்னும் வாழ்வின் மிச்சமாக இருப்பது எதுவென நினைக்கிறீர்கள்?**

அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. வாழும் வரை யாருக்காவது உதவும் வகையில் வாழவேண்டும் இதுவே என் எண்ணம்.

**உங்களுக்கு இலக்கியத்தோடும் இலக்கியவாதிகளோடு நிறைய நெருங்கிய தொடர்புண்டு.. அதில் நீங்கள் கற்ற அனுபவங்கள்?**

என் வாழ்வின் பெரிய பேறே இலக்கியமும் இலக்கியவாதிகளும் தான். நான் அண்ணாந்து பார்த்த எழுத்தாளர்களை ஆளுமைகளை எல்லாம் அருகிருந்து பார்க்கும் பழகும் அனுபவம் அலாதியானது. இலக்கிய உரைகளில் கிடைக்கும் அனுபவத்தை விட நிகழ்வுக்கு முன்பும் பின்பும் நடக்கும் உரையாடல்களுக்காவே ஏங்கிக் கிடப்பேன். அப்படிப்பட்ட அனுபவம் ஜெயகாந்தன், பரிணாமன், பாரதி கிருஷ்ணக்குமார், கோணங்கி, இரமேஷ் பிரேதன், தோழர் இரா.நல்லக்கண்ணு, மகேந்திரன், தமிழச்சி தங்கபாண்டியன், சுகிர்தாராணி, சக்திஜோதி, மாலதி மைத்ரி, பர்வீன்சுல்தானா,ச.தமிழ்ச்செல்வன்,கவிஞர் மீனாட்சி, வழக்கறிஞர் சுமதி, பிரபஞ்சன், பவா, எஸ்.இரா, தமிழ்மணவாளன், அமிர்தம் சூரியா, சூர்யதாஸ், உதயசங்கர், கி.இரா, (இன்னும் நிறைய ஆளுமைகளோடு நேரடி அனுபவம் உண்டு) மற்றும் இன்று புதிதாக எழுதும் பல எழுத்தாளர்களுடனான தொடர்பு, என்னை அதிகம் படிக்கவும் புதிய புதிய செய்திகளை இலக்கியங்களை ஆளுமைகளை அறிந்து கொள்ளவும் என்னை தகுதிபடுத்திக் கொள்ளவும் உறுதுணையாக அமைந்துள்ளன.

**உங்களின் இத்தகைய புகழுக்குக் காரணம்ஆணிவேர்உங்கள்குடும்பம்தான்.. அதுபற்றிய சிறுதூறல்கள்..**

இதில் எள்ளளவும் பொய்யில்லை. நான் சுதந்திரமாக எழுதவும் படிக்கவும் பொதுப்பணிகள் செய்யவும் என் குடும்பம் தான் காரணம். குறிப்பாக என் மனைவி ஜெயந்திதான்காரணம்.என்மனைவிக்குநான் மட்டும் தான் உலகம் இருந்தாலும் எனக்கு நேரத்தை விட்டுக்கொடுத்து, குடும்பத்தை தாங்கிநிர்வகித்துவருவதுதான்நான்சிறப்பாக செயல்பட காரணம். மகன்கள் இருவரும் எனக்கு எந்த கஷ்டமும் கொடுக்காமல் மருத்துவம் படித்திருக்கிறார்கள். மகளும் எனக்கு கிடைத்த தேவதை. குடும்பம் முழுதும் என் சொல்லை தட்டாதவர்கள் என் மீது அளவு கடந்த மரியாதை வைத்திருப்பவர்கள். அதனால் எனக்கு மகிழ்வும் உயர்வும்.

**ஐம்பதாண்டுகளை எட்டிய நீங்கள் வாழ்நாள் சாதனையென எதனைச் சொல்வீர்கள்?**

சாதனையென எதையும் சொல்ல முடியாது. சமூகத்தில் நல்ல நிலையில் மதிக்கப்படும் மனிதனாக ஏதோ சிறிய அளவு பெயரோடும் மரியாதையோடும் வலம் வருகிறேன். இலக்கிய உலகிலும் பொது வாழ்விலும், நண்பர்கள் மத்தியிலும், உறவுகளிடத்தும் எனக்கான குறிப்பிடத்தக்க இடம் இருப்பது ஒன்றே என் வாழ்நாள் சாதனையாக உணர்கிறேன்.

**மு.பாலசுப்பிரமணியன் எழுதியுள்ள நூல்கள்**

1. நடைவண்டி
2. சிட்டுக்குருவி
3. மரக்குதிரை
4. அன்னப்பறவை
5. வாழப்பிறந்தோம்
6. வெள்ளைத்திமிர்
7. கொதிக்கும் பூமி
8. மானாவாரி
9. அரைக்கீரை விற்கிறான் அம்பானி
10. செம்மண்குட்டை
11. பாட்டரங்கில் பாலா

# கம்பளமும் ஒரு வாடகை வீடும்

கம்பளம் ஒன்றி ருக்குக்
காசுதற் போது வேண்டாம்
சம்பளம் பெற்ற பின்னர்
தருக கா சென்று சொன்னாள்
பக்கலிற் குடியி ருக்கும்
பாத்திமா இங்ஙன் கேட்கச்
சிக்கலில் இருந்த போழ்தும்
சிந்தையோ கம்ப ளத்தின்

மீதினிற் செல்ல லாச்சே
விலையுமோ பேசி யாச்சே
காதினில் இந்தச் சேதி
கடிதினிற் சென்று வீழ்ந்த
போதினில், வாட கைக்குப்
புகலிடந் தந்தி ருந்த
மாதுதன் நெஞ்சுக் குள்ளே
மாபெரும் ஆசை கொண்டாள்.

வாடகை வீடு நானோ
வழங்கிரா விட்டால் வீடு
தேடிய வண்ணந் தானே
திருந்திருப் பாரே! சொந்த
வீடலா தோர்க்குக் 'காபெட்'
வேண்டுமோ? தேவை தானோ?
தாடி!நீ அதையெ னக்குத்
தந்ததாய் அவற்குச் சொல்லு !

வாடகை வீட்டில் வாழ்ந்தால்
வாங்கிடக் கூடா தாமோ ?
நீதிமா? எங்கி ருந்திவ்
விழிகுணம் வந்த தாமோ?
நாடக வாழ்வி லீதும்
நல்லதோர் பாத்தி ரந்தான்!
சூடகங் கூட வற்றுஞ்
சூழ்நிலை வந்தி டுங்காண்!

வாடகை யுலகு வாழ
வந்துள காலஞ் சொற்பம்
கூடுதல் வேட்கை, அள்ளிக்
கொள்ளவே விழையும் உள்ளம்
போடி!போ எல்லாம் ஓர்நாள்
போய்விடும் நீதந் திட்ட
வாடகை வீட்டில் நாமும்
கம்பளம் விரித்தால் லென்ன?

கவிஞர் எ.எம்.எம் அலி

# மதிப்புரை

வாசிப்பு என்பது ஓர் இனிய நுகர்வு படைப்பாளிக்கும் படிப்பாளிக்கும் இடையே பரிமாறப்படும் இன்சுவை விருந்து. படைப்பாளி ஒரு சொற் கூட விட்டுவிடலாகாது இப்படி நுகரப்படுவதே இருவர்க்குமான பேரின்ப நிகழ்வு. ஒரு நூலைப் புரட்டும் கையால் அப்படி அடிமுதல் நுனிவரை சுவைக்க கிடைப்பது அரிதே. அங்கொன்றும் இங்கொன்றுமாக தெறிக்கும் மின்னல்கள் மகிழ்ச்சியை வழங்குவதும் தேடித்தேடி அவற்றைக்காண்பதும் ஒரு சுவை.

தோழியர் ரிம்ஸா டீன் எழுதிய "மொழி பெயர்க்கப்படாத மௌனம்'' அவ்வகையான இனிய நுகர்வை வழங்குவது மகிழ்வு மகிழ்வு மகிழ்வு மகிழ்வு.

தலைப்பே பல தாக்கங்களை எழுப்புகின்றன. பேசுகின்ற பேச்சுக்களின் செறிவினை விடவும், பேசாத மௌனத்தின் அர்த்தங்கள் அதிகமல்லவா?? நான் சொல்லியவை முறையே உணர்த்துவன அளவற்றறைவை என்று இந்த நூலின் தலைப்பே நம்மை ஆழமாக அழைக்கின்றது.

பெண்ணுள்ளம் கொண்ட மென்மையும் சிறுவோர்ச் சீறும் உக்கிரமும் அடியூற்றாய் இழையோடும் அன்பின் சுவையும் நூல் முழுவதும் ஊசலாடுகின்றன.

நூலை திறக்கும் போதே சான்றோர் களின் வாழ்த்துரை வரிசை சுட்டி அழைக்கின்றது. நூலின் சுவைத்தேர்ந்த தேனீக்களின் முரல்கை மகிழ்ச்சிப் படுத்துக்கின்றது .

பதிப்பாசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் ஒசோ வின் கருத்துருவோடு தொடங்கியுள்ள திறனாய்வு அருமை.

தாயாருக்கு காணிக்கையாக தொடங்கு கின்றது நூல்.... இருவேறு முகம் காணப்படும் மனிதர்களை வாசிக்க முயல்கிற புறப்பாடு நன்று. "நேரத்துக்கு நேரம் மாறிடும் ஓணான் கூட்டம் போல் நேரம் வந்தால் தன் சுயரூபத்தை மாற்றியே போற்றி வாழும் மனித மாணிக்கங்கள்" என்ற எண்ணல் நன்று நனிநன்று.


''முழுமைக்காண கவிதைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திடவே பரீட்சையாய் எழுதுகின்றேன்''.

'நானும் எழுதி முடித்திடுவேன் புதுக் கவிதைகளை'

இவை தெறிக்கும் மின்னல் அழகு.

தந்தைக்காக உறவுக்காக எழுதப்பட்ட கவிதைகள் பரிவு எனும் மைதோய்த்து எழுதப்பட்டுள்ளன.

முத்தாய்ப்பாகத் தாய்வீட்டுக்கு விருந்தாளி யாக மகளின் உணர்ச்சி மழை உயிரோட்டமாக நனைகின்றது.






அகதி என்கின்ற கவிதையின் வலி சொல்லி மாளாது.

பள்ளி நாட்கள் பருவம் எய்திய காலம். நட்பின் பட்டாம்பூச்சிப் பருவம், காதலின் வருகை, கணவனோடு கனிந்த குடித்தனம், கருச்சுமந்த தாய்மை, மகளைப் போற்றி வளர்க்கும் அன்னை, மகளை வளர்க்கும் தாய் காட்டும் கடுமை, கனிவின் கற்கண்டு அல்லவா?? தாயுமானவளாக “நான் உன்னை என் இருவிழிகளுக்குள் அடைகாக்கின்றேன்” என்ற உணர்வின் வீச்சு சிறப்பு.

“நீயெனக்கு பொருளல்ல பொக்கிஷமே இதை நீயறியமாட்டாய் பெண்ணே” என்ற அன்பின் தெளிவு அழகு.

கருவறை பூக்களாக மகவை மடி சுமக்கும் தாய்மையின் மொழி அழகே அழகு. எதுவும் அழகு.

எனும் அழகுப்பட்டியல் கவிஞரின் இயற்கைத் தோய்வினை எடுத்துக்காட்டும் பேரழகு என்று பல படிநிலைகளைப் பெண்ணியல்கள் பேரழகாக மைதோய்த்து வடித்திருக்கின்றார் தோழியார் ரிம்ஸா டீன்.

எழுத எழுத இன்னும் கவிதை கனியும். எழுத்தின் கூர்மை கூடும் எழுதுக தோழியே வாழிய வாழிய.

**கவிமுகில் தங்க அன்புவல்லி**
பட்டுக்கோட்டை தமிழ்நாடு.

நூல் விலை : 350 (இலங்கை ரூபாய்)
பக்கங்கள் : 112

தொடர்புகளுக்கு...

அலைபேசி : +94 777555946
இமெயில்: editor@tamilnenjam.com


பைந்தமிழ்ச் சோலை...!
பாமலர்


1000 முத்துகள்
நூறாவது ஹைக்கூ ஆண்டு 2017


நிலாச்சோறு
எஸ். உதய பாலா


நண்டுகளும்
சிண்டுகளும்
நெய்தல் ஜெயபால்


முத்தொளி
காத்தவூர்க்கவி ஜுனைட்.எம்.பஹ்த்


மின்னொளி
இவ்வளவும் செய்ய முடிந்த என்னால் இதையும் செய்ய முடியும்


மெல்லொலிப்
பரல்கள்
கவிதைகள்


மனம் சுடும் தோட்டாக்கள்
கவிஞர் மு.கீதா
(தேவதா தமிழ்)


குதிரையாளி
ஹைக்கூ கவிதைகள்
சுபி பிரேம்


யார் அந்த நிலவு?
சிறுகதைகள்
மலர்மதி


தென்றலின்
தேடல்கள்
கவிதைகள்
கவிஞர் தென்றல் கவி
தமிழ்ச்சிட்டு


கவிஞர் பால தியாகராஜன்
மௌனச்
சிணுங்கல்கள்
கவிதைகள்


லப்... டப்...
கவிதைகள்
எஸ். உதய பாலா


காற்றினில்
தெறித்த
கனவுகள்
கவிதைகள்
பைந்தமிழ்ப் பாமணி
சரஸ்வதி பாஸ்கரன்


வலைக்குள்
மலர்ந்த
வனப்பு
கவிதைகள்
பாலமுனை பாறூக்


அழுக்குத் தேவதை
கவிதைகள்
ஆயுதா


விளிம்பைத் தாண்டிய விழிகள்
R.விஜயலட்சுமி


தெவிட்டாத பாவிருந்து
இரா.அரவிந்த் கார்த்திக்

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
மார்ச் 2019

# வாடா மலர்கள்

ஆதி மகன்களின் அறிமுகம் ஆடை வேற்றுமையில்
அந்நிய வாசனை ஓர் பூமி மக்களுக்கு

போர் முகாம்களின் முகவரி கூட தெரியாதவர்
பல்லக்கில் புகழ் சுமக்கும் துதிபாடிகளின்
கைப்பாவைப் பிள்ளைகளாய் பீரங்கியில் தவழும்
கைக்குழந்தைகளாய் வெடிகுண்டில் கோலி
விளையாடும் கோமாளிகள் – குழிபறிக்கும் கள்வர்க்கும்
விதிப்பாட்டில் துதிகோஷ ஓலமிடும்
தற்கொலைப்படை ராஜாக்கள் - தூக்குத் தூக்கிகளை
தூக்கிலிட்டு மார்தட்டி, என் மார் சுரந்த
பாலெல்லாம் நிலத்திற்கு திலகமிட்டு - சிவப்புப்
பாதையிலே கரைஞ்சயென் கற்பூரமே - நம்
நாட்டு காளைக்கும் வீரமுண்டு - அப்பப்பா
நாடெல்லாம் நீ விட்டுப்போன சுவாசக்காத்தில்
வீரக்குருதி துடிக்குதப்பா , காதல் ரோமியோக்களின்
வாசனை ரோஜாக்கள் உன் கல்லறைக்
கனவுக்கு காணிக்கையானதப்பா - பாரதத்தின்
காயப்பட்ட தேசத்துக்கு கல்கி மகன் - பிறந்தாச்சு ..!!

வாடா மலருக்கு. வாசனையும் பொறந்தாச்சு
வாழ்க! வாழ்கவென பாரத மைந்தனுக்கு
பேரிகை கொட்டியாச்சு.......!!!
பாரெல்லாம் ஒன்னாச்சு....!!!!

**கவிதாயினி. விஜி வெங்கட்**
ஹைதராபாத்.